பக்கங்கள்:-27

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஐப்பசி 08 | சனிக்கிழமை | 25.10.2025 | அதிர்வு 086

## கொடிகாமத்தில் துப்பாக்கிச்சூடு!

### டிரக்டர் சாரதி படுகாயம்



யாழ்ப்பாணத்தில் சட்டவிரோத மணலை ஏற்றிச் சென்ற டிரக்டர் சாரதி மீது 06

## பட்டப்பகலில் இடம்பெறும் படுகொலைகளை பாதாளக் குழு எனக் கூறி நியாயப்படுத்தாதீர்!



### சட்டம், ஒழுங்கை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அநுர அரசிடம் சுமந்திரன் வலியுறுத்து

“பாதாள உலகக் குழுக்கள் மற்றும் போதைப்பொருள் வர்த்தகத்துக்கு எதிராக அரசால் முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் பாராட்டத்தக்கவை என்றாலும், அதனைக் காரணமாகக் கூறி பொது வெளியில் பட்டப்பகலில் இடம்பெறும் படுகொலைகளை நியாயப்படுத்துவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.”

– இவ்வாறு இலங்கைத் 07

# போதைப்பொருளை வேரோடு ஒழிக்க ஒன்றுபடுங்கள்!



## ஜனாதிபதி அநுர வலியுறுத்து

**“அரசியல் மற்றும் பொருளாதார விடயங்கள் குறித்து விவாதிக்க முடிந்தாலும், நாட்டில் இருந்து போதைப்பொருள் பேரழிவை ஒழிப்பதற்கான தேசிய பொறுப்பை நிறைவேற்றுவதில் இனி மேலும் விவாதித்துக் கொண்டிருப்பதற்கு இடமில்லை. போதைப்பொருள் பேரழிவை ஒழிப்பதற்கான துரித வேலைத்திட்டத்துக்காக முழு நாடும் ஒன்றுபட வேண்டும்.”**

**- இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.** 03

# யாழில் நேற்றும் அறுவர் ஹெரோயினுடன் கைது!

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணத்தில் பல்வேறு பகுதிகளில் ஹெரோயின் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 6 பேர் நேற்று கைது செய்யப்பட்டனர்.

போதைப்பொருள் தொடர்பில் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் யாழ்ப்பாணம் பொலிஸாரின் நேற்றைய திடீர் சோதனையின் போது இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

ஒரு சந்தேகநபரிடம் இருந்து மூன்று கிராம் ஹெரோயினும், ஐந்து பேரிடம் இருந்து வெவ்வேறாக நான்கு கிராம் ஹெரோயினும் மீட்கப்பட்டது. 06






என் அனுபவங்கள், எனக்குத் தெரிந்தவை, என் பட்டறிவுக்கு உட்பட்டவை பற்றிய விடயங்களையே இந்தப் பத்தியில் தொடர்ந்து எழுதி வருகின்றேன். அதனால் ஒருவகையில் இது சுய புராணம் தான். அந்தவகையில் இன்று எழுதுவதும் ஒரு வித்தியாசமான சுயபுராணம் அல்லது சுயதம்பட்டம்தான். அதற்குக் காரணம் உண்டு.

என்னுடைய ஊடகப் பணி இப்போது 46 ஆண்டுகளைக் கடந்து விட்டது. இதிலே சுமார் கால் நூற்றாண்டு காலம் நேரடி யுத்தத்துக்கு மத்தியில் நான் பணியாற்றி இருக்கின்றேன். இந்தக் காலத்தில் களத்தை விட்டு ஓடி ஒளித்தவன் அல்லன் நான்.

இந்தக் காலத்தில் எங்கோ ஒளித்திருந்து நாம் பணியாற்றவில்லை. மரணங்கள் மலிந்த பூமியில், துப்பாக்கிச் சன்னங்களும், ஷெல் கணைகளும், பீரங்கிக் குண்டுகளும் கனன்று கொண்டிருந்த பிரதேசத்தில் – அலுவலகத்தில் இருந்துதான் – பணியாற்றினோம். எங்களை முன்னிறுத்தி, வெளிப்படுத்தித்தான் ஊடகப் 06

# இழப்பீட்டு அலுவலகத்துக்கு பாதுகாப்புத் தரப்பினரை நியமித்தமையை நாடாளுமன்றில் மறுக்காத பிரதமர்






இழப்பீட்டு அலுவலகத்துக்கு பாதுகாப்புத் தரப்பினரை அரசமைப்புக் கவுன்சில் தேர்ந்தெடுத்துப் பரிந்துரைத்து அவர்களை நியமிக்க வழி செய்தது என்ற குற்றச்சாட்டை நான் நாடாளுமன்றத்தில் வெளிப்படையாக பிரதமரைச் சுட்டி முன்வைத்த போது எனது மற்றைய கருத்துகளுக்குப் பதில் கூறிய பிரதமர் இந்தக் குற்றச்சாட்டை மட்டும் மறுக்கவுமில்லை, அதற்குப் பதில் கூறவுமில்லை.

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தார்.

நேற்றைய தினம் இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வின் போது நான் சென்ற முறை எழுப்பிய ஐ.நா மனித உரிமைகள் கவுன்சில் தொடர்பான நிலைப்பாட்டுக்கான வினாவின் பதிலை பிரதமர் வழங்கியிருந்தார். அதன்போது, அதில் அவர் உள்நாட்டுப் பொறிமுறை மாத்திரமே அனுமதிக்கப்படும், சர்வதேச பொறிமுறைக்கு அனுமதியில்லை, இதனால் நாடு பிளவுபடும் எனக் கூறி இருந்தார்.

அதற்குப் பதிலளித்து நான் நேற்று சபையில் உரையாற்றினேன். – என்று சாணக்கியன் குறிப்பிட்டார்.

அவரின் அந்த உரையின் விவரம் வருமாறு:-

பிரதமர் அளித்த பதிலுக்கு நன்றி தெரிவிக்கிறேன். ஆனால், பிரதமரே, உங்களின் ஆட்சிக் காலத்தின் சுமார் 20 வீதம் ஏற்கனவே முடிந்துவிட்டது என்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். அதாவது, ஒரு வருடம் கடந்துவிட்டது. இப்போது, ஒரு வருடம் கடந்த நிலையில், நீங்கள் இந்த சபைக்கு கூறுவது என்னவெனில் அரசு உள்நாட்டு முறைமையைக் கொண்டு செல்ல விரும்புகிறது, சர்வதேச தலையீடுகளுக்கு அனுமதியில்லை என்கிறீர்கள். ஏனெனில் அது சமூகங்களைப் பிளக்கும் என்றும் நாட்டில் மேலும் பிரச்சினைகளை உருவாக்கும் என்றும் கூறுகிறீர்கள்.

அந்த கருத்தை நான் ஒப்புக்கொள்வதில்லை. உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமெனில் பாதிக்கப்பட்ட சமூகத்தினர் நம்பும், நம்பிக்கையுடன் ஈடுபடும் ஒரு செயல்முறை இருக்க வேண்டும். ஆனால் நீங்கள் அதை நிராகரித்துள்ளீர்கள், மறுத்துள்ளீர்கள். இதன் பொருள், பாதிக்கப்பட்ட சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினராக, எனது ஏமாற்றத்தை வெளிப்படுத்துகிறேன். இந்த அரசாவது குறைந்தபட்சம் பாதிக்கப்பட்ட மக்களின் குரலைக் கேட்டு சர்வதேச விசாரணைக்கு ஒப்புக் கொள்வார்கள் என நாங்கள் நம்பியிருந்தோம்.

எனினும், எனது நிலைப்பாடு தெளிவாகவே இருக்கிறது – நாங்கள் உங்கள் உள்நாட்டு முறைமையை நிராகரிக்கிறோம். மேலும் பாதிக்கப்பட்ட சமூகத்தின் பிரதிநிதிகளாக நாங்கள் சர்வதேச விசாரணையையே கோருகிறோம். ஏனெனில் இலங்கையின் அரசாங்க முறைமைகள் மீதான நம்பிக்கை எங்களுக்கில்லை. இது போர் முடிந்த 16 ஆண்டுகளாக எங்களின் நிலைப்பாடாகவே உள்ளது.

இப்போது, நீங்கள் குறிப்பிட்ட உள்நாட்டு முறைமைப் பற்றிக் கேட்க விரும்புகிறேன் – பிரதமரே, உள்நாட்டு முறைமை நீதியாக சமமாக செயல்படும் என்று நீங்கள் எப்படி கூறுகின்றீர்கள்? எப்போது காணாமல் போனவர்களுக்கான அலுவலகம் (Office of Missing Persons) இயங்குவதற்குத் தேவையான பணியாளர் எண்ணிக்கை 250-ஐ கடந்து இருக்க வேண்டும். ஆனால் நீங்கள் ஆட்சிக்கு வந்த ஓர் ஆண்டுக்குப் பிறகும், தற்போது 29 பேரே உள்ளனர்? இதுதான் உள்நாட்டு பொறிமுறையா?

மாண்புமிகு நீதித்துறை அமைச்சரே, தயவுசெய்து நான் இந்த எண்ணிக்கையை பிழையாக கூறுகிறேன் என்று சொல்ல வேண்டாம் – நீங்கள் உங்கள் அமைச்சகத்தில் சிறிது நேரம் செலவழித்து இந்த எண்ணிக்கைகள் மற்றும் தரவுகளைப் சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

இப்போது, காணாமல் போனவர்களின் அலுவலகத்தில் 59 இடங்களில் 13 பேர் மட்டுமே உள்ளனர். ஒதுக்கப்பட்ட 129 மில்லியனில், ஜூன் 30ஆம் தேதியளவில் 36 மில்லியன் ரூபாவே பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், பிரதமரே, எமக்கான நீதி நீண்ட காலமாக நிலுவையில் உள்ள ஒரு விஷயம். நீங்கள் கூறும் இந்த உள்நாட்டு முயற்சிகள் எந்தளவு பயனளிக்கும்?

இலங்கை இழப்பீடு அலுவலகம் (Office of Reparations) பற்றியும் கவலை இருக்கிறது. 2009இல் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தற்காலிகமாக ரூ.200,000 வழங்க ஒப்பந்தம் இருந்தது. ஆனால் 253 குடும்பங்களுக்கு மட்டுமே சுமார் ரூ.60 மில்லியன் வழங்கப்பட்டது. 2022 இல் அமைச்சர் அலி சப்ரி ரூ.100,000 வழங்க முன்வந்தார், அது நிராகரிக்கப்பட்டது. பின்னர் ரூ.200,000 ஆக உயர்த்தினார்கள், அதுவும் நிராகரிக்கப்பட்டது. 2024 ஆம் ஆண்டில் ரூ.1,000 மில்லியன் ஒதுக்கப்பட்டதில் ரூ.800 மில்லியன் மட்டுமே செலவழிக்கப்பட்டது.

2025 பட்ஜெட்டில் மீண்டும் ரூ.1,000 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது, ஆனால் இதுவரை ஒரு காசும் வழங்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட தாய்மார்கள் பெரும்பாலும் 2000 க்கும் முன்னரே காணாமல் போனவர்களின் தாய்மார்கள். மொத்தம் 16,000 பேரில் சுமார் 7,000-8,000 பேர் அதற்கு முன்னரே பதிவு செய்யப்பட்டவர்கள்.

இப்போது, இலங்கை இழப்பீட்டு அலுவலகத்தில் நியமிக்கப்படவிருக்கும் இரண்டு உறுப்பினர்களும் இராணுவ பின்னணியுடையவர்கள். இதனை பாதிக்கப்பட்ட எமது மக்களை கடுமையாக எதிர்க்கிறார்கள். ஐந்து உறுப்பினர்களில் மூவரைத் தமிழர்கள் எதிர்க்கிறார்கள். இந்நிலையில், இழப்பீட்டு அலுவலகம் எவ்வாறு நம்பகமாக செயல்படும் என்று நீங்கள் எப்படி கூற முடியும்?

மேலும், அன்றாட பிரச்சினைகள் – உதாரணத்திற்கு மட்டக்களப்பு மருத்துவக் கல்லூரி பதாதை – சிங்களத்தில் மட்டுமே உள்ளது, தமிழில் இல்லை. இவற்றையும் நான் எழுத்து மூலமாக தெரிவிப்பேன். எனது நோக்கம் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தீர்வினை பெற்றுக்கொடுப்பதே ஆகும். – என்றார்.







# போதைப்பொருளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போதைப்பொருள் பேரழிவை வேரோடு ஒழிப்பதற்கான ”முழு நாடுமே ஒன்றாக – தேசிய செயற்பாடு” குறித்து ஊடக நிறுவனங்களின் தலைவர்களுக்கு விளக்கமளிப்பதற்காக ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்ட போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

தற்போது தேசிய பேரழிவாக மாறி இளைஞர் சமூகத்தைப் போன்றே பாடசாலை மாணவர்களின் உயிருக்கு ஆபத்தை விளைவித்து வரும் போதைப் பொருள் வர்த்தகத்தை மையமாகக் கொண்டு அநேகமான குற்றங்கள் நடப்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது. அதன்படி, தேசிய மட்டத்தில் அரசியல் தலைமைத்துவம், செயற்திறனாக முடிவெடுக்கும் பொறிமுறை மட்டுமன்றி பரந்த பொது மக்கள் பங்கேற்புடன் கூடிய தேசிய மட்டத்திலான வேலைத்திட்டத்தின் ஊடாக போதைப்பொருள் அச்சுறுத்தலை முழுமையாக ஒழிக்க வேண்டும் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

அந்தத் தேசிய நோக்கத்தை அடைவதற்காக , “முழு நாடுமே ஒன்றாக – தேசிய செயற்பாடு” முன்னெடுக்கப்படுவதோடு பரந்தளவிலான பிரச்சார செயல்முறையின் ஊடாகப் போதைப்பொருள் அச்சுறுத்தல் குறித்து சமூகத்தின் விழிப்புணர்வை ஏற்படுத்த ஒரு பாரிய திட்டமொன்றாக இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

இந்தப் பிரசாரத் திட்டத்தைச் செயற்படுத்துவதில் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களால் மேற்கொள்ளக் கூடிய பங்களிப்பு குறித்து இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, போதைப் பொருள் வர்த்தகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய குற்றக் கும்பல்களின் நிதி பலம் என்பன பொருளாதாரம், சமூகக் கட்டமைப்பு, அரச பொறிமுறை மற்றும் சட்டத்தின் ஆட்சியைக் கூட வீழ்ச்சியடையச் செய்து நாட்டையும் சமூகத்தையும் அழித்து வருவதாகத் தெரிவித்தார்.

தற்போதைய அரசு இந்த அச்சுறுத்தலுக்கு இனிமேலும் இடமளிப்பதில்லை என்று முடிவு செய்துள்ளதாகவும், இதற்காக அனைவரின் பங்களிப்பையும் எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி கூறினார்.

மேலும், கடந்த காலங்களில் அரசியல் நிழலின் கீழ் சுதந்திரமாக வளர்ந்த இந்தக் குற்றங்கள், தற்போது நாட்டையும் சமூகத்தையும் கடுமையாக ஆக்கிரமித்துள்ளது என்பதையும், அதற்கு பொலிஸ், சுங்கம், மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் மற்றும் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் உள்ளிட்ட முக்கிய அரச நிறுவனங்களிடம் இருந்து கிடைக்கும் ஆதரவையும் ஜனாதிபதி நினைவு கூர்ந்தார்.

மீண்டும் இவ்வாறான நிலைமை ஏற்படாதவாறு எதிர்கால சந்ததியினருக்காக இந்தத் தேசிய பேரழிவைத் தோற்கடிப்பதற்கு அனைவர் மீதும் சுமத்தப்பட்டுள்ள மறுக்க முடியாத பொறுப்பை ஜனாதிபதி மேலும் வலியுறுத்தினார்.

சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமநாயக்க, ஆகியோருடன் அரச மற்றும் தனியார் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள், பொழுதுபோக்கு துறைசார் நிறுவனங்களின் தலைவர்கள் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதேவேளை, முழு நாடுமே ஒன்றாக தேசிய செயற்பாட்டின் ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் ஒக்டோபர் 30 ஆம் திகதி காலை 10 மணிக்கு கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நடைபெறவுள்ளது.











# வடக்கு முதலீட்டாளர் மாநாட்டை ஜனவரியில் நடத்தத் தீர்மானம்

## முழுமையான ஆதரவு வழங்குமாறு அதிகாரிகளிடம் ஆளுநர் கோரிக்கை

வடக்கு மாகாண முதலீட்டாளர் மாநாட்டைத் தொடர்புடைய அரச திணைக்களங்களின் ஆதரவுடன் அடுத்த ஆண்டு ஜனவரியில் நடத்துவதற்கு "த மனேஜ்மன்ட்க்ளப் - இலங்கை" தீர்மானித்துள்ளது. அதற்கு முழுமையான ஆதரவை வழங்குமாறு அதிகாரிகளை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கேட்டுக் கொண்டுள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில், பிரதம செயலாளர், வடக்கின் அனைத்து மாவட்டங்களினதும் மாவட்ட செயலர்கள், பிரதேச செயலர்களின் பங்குபற்றுதலுடன் த மனேஜ்ட்மன்ட் க்ளப்பினருடன் ஆளுநர் செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை கலந்துரையாடல் நடைபெற்றது.

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர்,

"தற்போதைய அரசின் காலத்தில் முதலீட்டுக்கான சூழல் கனிந்துள்ளது. இதை நாங்கள் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அந்தவகையில் "த மனேஜ்ட்மன்ட் க்ளப்" வடக்குக்கான முதலீட்டாளர் மாநாட்டை ஒழுங்குபடுத்துகின்றது. எதிர்வரும் ஜனவரி மாதம் 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் நடத்துவதற்கு அவர்கள் எதிர்பார்த்துள்ளனர்.

இலங்கை முதலீட்டு சபை, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, தேசிய ஏற்றுமதியாளர்கள் சபை, இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம், தொழில்துறை அமைச்சகங்கள் மற்றும் வெளிவிவகார அமைச்சின் ஆதரவுடன் இந்த மாநாட்டை முன்னெடுப்பதற்கு அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

மாநாட்டுக்குத் தேவையான எமது வடக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்தினதும் தகவல்கள் மற்றும் முதலீட்டுக்கான வாய்ப்புக்கள் தொடர்பான ஒத்துழைப்புக்களை வழங்குவதன் ஊடாக, எமது மாகாணத்தை மேம்படுத்த முடியும்.

உள்நாட்டு மொத்த தேசிய உற்பத்திக்கு எமது மாகாணம் 4.2 சதவீதமே பங்களிப்புச் செய்கின்றது. அதனை ஆகக் குறைந்தது 10 சதவீதமாகவேனும் உயர்த்தவேண்டும். அதற்கு இவ்வாறான முதலீட்டாளர் மாநாடுகளும் அதன் ஊடாக எமது மாகாணத்தை நோக்கி முதலீட்டாளர்களும் வரவேண்டும்.

முதலீட்டாளர்கள் இங்கு வருகின்றபோது அவர்களுக்கான ஒத்துழைப்புக்களை அரச அதிகாரிகள் வழங்க வேண்டும். அதேநேரம், மக்களும் முதலீடுகளை எதிர்க்காமல் அந்த முதலீடுகள் ஊடாக எமக்குத் தேவையானவற்றை பேரம்பேசிப் பெற்றுக்கொள்ள வேண்டும்." - என்றார் ஆளுநர்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் - திட்டமிடல், யாழ்ப்பாணம், கிளிநொச்சி,மன்னார்,முல்லைத்தீவுமாவட்டங்களின் மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் பங்கேற்றனர்.








# செவ்வந்தியின் தொலைபேசியில் நாமல் எம்.பியின் பெயர் உள்ளதா?

## ஊடகங்களிடம் சிரித்தபடியே அவர் பதில்

“இஷாரா செவ்வந்தியின் தொலைபேசியில் உங்களது பெயர் எவ்வாறு ‘சேவ்’ செய்யப்பட்டிருக்கும்.” – என்று ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு நேற்று சிரித்தபடியே பதிலளித்துள்ளார் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ.

“செவ்வந்தியின் தொலைபேசியைப் பரிசோதித்தவர்களிடம்தான் அது பற்றி கேட்க வேண்டும். செவ்வந்தியின் தொலைபேசியைப் பார்ப்பதற்கு பலரும் ஆவலாக உள்ளனர் போல்தான் தெரிகின்றது.

“அவ்வாறானவர்கள் பரிசோதித்து எனது பெயர் எவ்வாறு உள்ளது எனக் கூறினால் நல்லது.” – என்பதே மேற்படி கேள்விக்கு நாமல் வழங்கிய பதிலாகும்.

“மகே ராஜபக்ஷ(எனது ராஜபக்ஷ) எனப் பெயரொன்று சேவ் செய்யப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியானதே?” எனவும் நாமலிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அவர்,

“சிலருக்கு தற்போது ராஜபக்ஷக்கள்தான் கனவில் கூட வருகின்றனர். அந்தக் கட்சியிலும் (என்.பி.பி.) நாமல் ஒருவர் இருக்கின்றார், அது அவரா என்பது கூடத் தெரியவில்லை. நாமல் என்ற பெயரைக் கண்டதுமே அவர்களுக்கு என்னை நினைவுக்கு வருவது சந்தோஷம். பெண்கள் தமது காதலர்களின் பெயருக்கு முன்னால்தான் எனது என எழுதி சேவ் செய்வார்கள். சிலவேளை அது அப்படி சேவ் செய்யப்பட்ட ஒரு பெயராகக்கூட இருக்கலாம்.” – என்றார் நாமல் எம்.பி

# சீரற்ற காலநிலையால் 21 ஆயிரம் பேர் பாதிப்பு

## 593 வீடுகள் சேதம்

நுவரெலியா, கண்டி, பதுளை, குருநாகல், காலி உட்பட நாட்டில் 16 மாவட்டங்களில் நிலவும் கடும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலையால் 5 ஆயிரத்து 361 குடும்பங்களைச் சேர்ந்த 21 ஆயிரத்து 778 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சீரற்ற காலநிலையால் நால்வர் உயிரிழந்துள்ளனர்.

வெள்ளம், மண்சரிவால் 2 வீடுகள் முழுமையாகவும், 591 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளன என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலையால் காலி மாவட்டத்திலேயே அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிட்டத்தக்கது.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பணியாற்ற வேண்டியிருந்தது. புனைபெயரிலோ அல்லது அரூப நிலையிலோ, மறைமுகப் பாணியிலோ இருந்து நாம் பணியாற்றவில்லை.

அதற்கும் மேலதிகமாக என்னுடைய பத்திரிகையில், என் சக ஊடகவியலாளர்கள் எழுதுகின்ற எல்லா செய்திகளுக்கும் – எல்லாத் தகவல்களுக்கும் – எல்லாக் கட்டுரைகளுக்கும் – எல்லாப் புதினங்களுக்கும் – ஆசிரியர் என்ற முறையில் நானே முதன்மைப் பொறுப்பு – நான் மட்டுமே பொறுப்பு – என்று பொறுப்புக் கூறல் கடப்பாட்டோடுதான் அந்தப் பணியை ஆற்றி வந்திருக்கின்றேன். இந்த விடயத்தை எந்தச் சந்தர்ப்பத்திலும் நான் விட்டுக் கொடுத்தவன் அல்லன். எனக்குக் கீழ் வேலை செய்த எந்தப் பணியாளரையும், எந்தச் செய்தியாளரரையும், எந்த உதவி ஆசிரியரையும் அல்லது பத்திரிகை நிர்வாகத்தையும் பத்திரிகையில் பிரசுரமான அல்லது பிரசுரமாகத் தவறிய ஒரு செய்திக்காக அவர்களைப் பொறுப்புக் கூறிக் காட்டிக் கொடுக்கின்ற கீழ்த்தரமான வேலையை நான் என்றும் செய்தவன் அல்லன் என்று என் நெஞ்சுக்கு நீதியாகக் கூறுவேன்.

எல்லா செய்திகளுக்கும் – எல்லா விடயங்களுக்கும் – நானே பொறுப்பு என்று அவர்களுக்கு காவலரணாகவே இருந்திருக்கின்றேன். அது சட்ட, நீதித் துறையாக இருக்கலாம். பொலிஸ், முப்படைகள், இந்திய அமைதிப்படை, விடுதலைப் புலிகள் இயக்கம் அல்லது வேறு இயக்கங்கள் அல்லது அரசு நிர்வாகங்கள், ஏன் அவற்றையும் தாண்டி என்னுடைய பத்திரிகை நிர்வாகம் ஆகியவற்றின் முன்னால் எனது செய்தியாளர்களையோ, உதவி ஆசிரியர்களையோ, ஊடக சகபாடிகளையோ நான் காட்டிக் கொடுத்தவன் அல்லன். அவர்களுக்காக, விடயத்துக்கான பொறுப்பை நான் தனித்து ஏற்றிருப்பேனே தவிர, யாரையும் காட்டிக் கொடுக்கவேயில்லை.

யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, சுடர் ஒளி ஆசிரியராக கொழும்பில் சிங்கத்தின் குகைக்குள் 'உறுமிய' காலகட்டத்தில் கூட இந்தப் பொறுப்புக்கூறலில் இருந்து நான் விலகியவனே அல்லன்.

இவற்றை நான் இன்று விவரிப்பதற்கு ஒரு காரணம் உண்டு. எந்தக் கட்டத்திலும் இந்த 46 ஆண்டுகால ஊடகப் பணியில் அநாமதேயமாக, ஒளித்திருந்து, கபடமாக, என்னைப் பொறுப்புக்கூறலுக்குக் காட்டிக் கொடுக்காமல், அரூபக் கரத்தில் எழுதியோ செயற்பட்டவனோ அல்லன் நான்.

கொடூர யுத்தத்துக்கு மத்தியில் ஆயுதங்களை வைத்திருந்த தரப்புகளை – மோசமான இலங்கை ஜனாதிபதிகளை, பாதுகாப்புத் தரப்பினரை – படுபச்சையாக தாக்கி, நாமே பொறுப்பு என்று முன்னிலையில் நின்று, எம்மை வெளிப்படுத்தி, அதற்கான மோசமான விளைவுகளை எதிர் கொண்டபடி காத்திரமாக எழுத்துப் பணியாற்றிய எங்களுக்கு மொட்டைப் பெட்டிஷன் எழுதுவது போல ஒளிந்திருந்து எழுதும் கீழ்த்தரமான பண்பியல்பு என்றும் இருந்ததில்லை.

இன்று சமூக ஊடகங்களில் தங்களை வெளிப்படுத்தாமல், புனைபெயர்களிலும் மறை நாமங்களிலும் மூன்றாம் தர ஊடகவியலாளர்கள் போல ஒளித்திருந்து, பொய்புனைந்து, புரட்டு கதைகளை அவிழ்த்து விடும் கீழ்த்தரமான நபர்களுக்கு சமதையான வேலைகளை நாங்கள் செய்பவர்களும் அல்லர். அப்படி செய்பவர்கள் குறித்து அலட்டிக் கொள்ளவோ அல்லது அதைக் கண்டு அஞ்சவோ நாங்கள் முதுகெலும்பற்றவர்களும் அல்லர். அத்தகைய பேடிகளின் திருகுதாளங்களையும் அண்டப் புனைகதைகளையும் பார்த்து மிரள்வதற்கு நாங்கள் முட்டாள்களும் அல்லர். இந்த நரி பனங்காட்டு சலசலப்புகளுக்கு அஞ்சாது என்பதை ஏற்கனவே சுட்டிக் காட்டி இருக்கின்றேன்.

அரசமைப்பு கவுன்ஸிலில் நடந்த குளறுபடிகள் பற்றி கடந்த 14ஆம் திகதியும், நேற்றுமுன்தினமும், நேற்றும் நமது பத்திரிகையில் வந்த செய்தியைக் கண்டதும் நேற்றுக் காலை சில முதுகெலும்பற்ற பேடிகள் தங்களின் அநாமதேய திருகுதாளக் கைவரிசையை உடனே தொடங்கி விட்டனர்.

அடிப்படையே இல்லாத – உண்மை சற்றும் கலவாத – பெரும் பொய்ப் பிரசாரத்தை – அபவாதத்தை – ஒரு குழு முகநூல் ஊடாக, என்னை சம்பந்தப்படுத்தி ஏதோ ஒரு மோசமான கிரிமினல் குற்றத்துக்காக பொலிஸார் எனக்கு எதிராக விசாரணை நடத்துகின்றனர் என சமூக ஊடகங்களில் தகவலை வெளியிட்டு, அவற்றை பிரபலங்களின் முகநூல் பக்கங்களோடு இணைத்து, தங்கள் கைவரிசையை காட்டி வருகின்றனர்.

அதன் மூலம் அவர்கள் –

1. நேற்று காலையில் மிகக் காட்டமான சில உண்மைகளை நான் இப்பத்தியில் எழுதிய கையோடு தங்கள் கீழ்த்தரமான செய்கையைக் காட்டியதன் மூலம், தாங்கள் எந்த வாத்தியார் அணியை சேர்ந்தவர்கள் – எந்த சின்ன ஜமீனின் அல்லக்கைகள் என்பதை அம்பலப்படுத்தி இருக்கின்றார்கள். அந்தப் பிரமுகரை – மன்னிக்கவும் பிரகிருதியை – சூழ, இவ்வாறு அநாமதேயமாக – தங்களை வெளிப்படுத்தாமல் – கீழ்த்தரமான ஊடக போக்கை முன்னெடுக்கும் சின்னத்தன கேவலங்கள் இருக்கின்றன என்பதை நிரூபித்திருக்கின்றார்கள்.

2. என்னோடு சம்பந்தப்படாத ஏதோ ஒரு விடயத்தை என்னோடு சம்பத்தப்பட்டதாகக் கதை புனைந்து, அது குறித்து மீண்டும் பொலிஸ் விசாரணை நடைபெறுவதாக அந்தப் புரட்டாளர்கள் கதை விட்டு இருக்கின்றார்கள். யுத்தம் முடிந்த காலத்துக்குப் பின்னர் கடந்த 16 ஆண்டுகளில் என் ஊடகத்தில் வெளியான செய்திகள் தவிர்ந்த வேறு எந்த விடயத்துக்காகவும் – எந்தக் குற்றச் செயலுக்காகவும் – என்னைச் சம்பந்தப்படுத்தியோ, எனக்கு எதிராகவோ அல்லது என் நிறுவனம் குறித்தோ எந்தப் பொலிஸ் விசாரணையும் எந்தச் சமயத்திலும் நடைபெறவில்லை என்பதை அடித்துக் கூறுகின்றேன். அப்படி, குறிப்பிட்ட அந்தச் சட்டம்பியாரைச் சூழ இருக்கும் அவரது அல்லக்கைகளான புனைபெயர் முகநூல் போராளிகள் அப்படி ஒரு சம்பவத்தை நிரூபிக்கும்படி அவர்களுக்குப் பகிரங்க சவால் விடுகின்றேன். குறைந்தபட்சம் எந்தப் பொலிஸ் நிலையத்தில், எந்தப் பொலிஸ் தரப்பு அப்படியான விசாரணை எதனையும் எனக்கு எதிராக, எந்தக் கட்டத்திலாவது செய்திருக்கின்றதா என்பதை வெளிப்படுத்தும் படி அந்த சட்டம்பியைச் சேர்ந்த மூன்றாம் தர ஊடகப் பம்மாத்துக்களிடம் நான் சவால் விடுகின்றேன்.

3. துணிவிருந்தால், இத்தகைய அபவாதக் குற்றச்சாட்டை தங்கள் உண்மைப் பெயர் விவரங்களுடன் கூடிய முகநூலில் அல்லது சமூக ஊடகத்தில் வெளிப்படுத்துமாறும் சவால் முன்வைக்கின்றேன்.

4. யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களின் தியாகத்தோடு அமைந்த உன்னத பணியை தனது கீழ்த்தர அரசியலுக்கு பயன்படுத்திக் கொண்ட ஒரு அரசியல் பிரமுகரின் செய்தி ஊடகமும் இத்தகைய குற்றச்சாட்டை – அபவாதத்தை – தன் பத்திரிகையின் முன் பக்கத்தில் பெயர் குறிப்பிடாமல் சூசகமாக பிரசுரித்து இருந்தது. அப்படி பிரசுரித்து இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்னமும் கூட அத்தகைய பொலிஸ் விசாரணை எனக்கு எதிராக அல்லது நான் நடத்திய நிறுவனத்துக்கு எதிராக நடந்தமை பற்றி ஏதேனும் ஓர் ஆதாரத்தை வெளிப்படுத்தும்படி அந்த ஊடகத் தரப்புக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் மீண்டும் சவால் விடுகின்றேன். இல்லையேல் இப்போது காலம் பிந்தியாவது தனது முன்னைய செய்தியின் தவறை அதே முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்து, இன்னமும் ஊடக தர்மப் பண்பியல்பு கொஞ்ச நஞ்சமாவது தங்களிடம் மிஞ்சி இருக்கின்றது என்பதைக் காட்டும்படி இந்தச் சந்தர்ப்பத்தில், தன்னுடைய சுய அரசியலுக்கு தமிழினத்தின் ஊடகப் போராட்டத்தை கீழ்த்தரமாகப் பயன்படுத்திய அத்தகைய நபர்களுக்குச் சுட்டிக்காட்டுகின்றேன்.

எனது பத்திரிகையில் வருகின்ற செய்திகள் சம்பந்தமான விடயங்களுக்கு நேரடியாக மோதுங்கள். நாங்கள் எங்களுடைய இடம், விலாசம், பொறுப்புக்கூறலை வெளிப்படுத்தித்தான் ஊடகமாகச் செயற்படுகின்றோம். சட்டரீதியாக நாங்கள் தவறிழைத்தால் சட்டரீதியாக நடவடிக்கை எடுங்கள். உங்கள் திருகுதாளங்களை மூடி மறைப்பதற்கு – ஊடகங்களை ஊடகவியலாளர்களை அபாண்டமாக – அபவாதமாக – மிரட்டி அடக்கலாம் என்று சிந்தித்தால் அது ஒருபோதும் வெற்றி பெறாது.

சமூக ஊடகங்களைக் கீழ்த்தரமான – அபவாதமான – மோசமான – போக்கில் பயன்படுத்தும் உங்களின் நேற்றைய அணுகுமுறையும் நடவடிக்கையும், தமிழர் தரப்பில் காத்திரமான ஓர் அரசியல் தரப்பாக நீங்கள் நீடிப்பதற்கு அனுமதிப்பது பேராபத்தானது என்ற கருத்து நிலையை எங்கள் மத்தியில் ஆழமாக ஏற்படுத்தி விட்டது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

## கொடிகாமத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று வெள்ளிக்கிழமை இரவு பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் சாரதி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொடிகாமத்தைச் சேர்ந்த மாணிக்கவாசகர் மதுசன் (வயது 20) என்ற இளைஞரே படுகாயமடைந்துள்ளார்.

தென்மராட்சி, கெற்போலி பகுதியில் சட்டவிரோதமாக அகழ்ந்த மணலை ஏற்றி வந்த டிரக்டரைக் கச்சாய் துறைமுகப் பகுதியில் வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் இடைமறித்தனர்.

இதன்போது பொலிஸாரின் கட்டளையை மீறி சாரதி டிரக்டரில் தொடர்ந்து பயணித்த வேளை பொலிஸாரினால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

இதன்போது டிரக்டரின் சாரதி படுகாயமடைந்தார். அவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அவர் மாற்றப்பட்டார்.

## யாழில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேலதிக விசாரணைகளுக்குப் பின்னர் சந்தேகநபர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.




# புலிகள் கூட அலுவலகங்களுக்குள் புகுந்து தமது எதிரிகளைக் கொலை செய்யவில்லை

## நாட்டை அராஜக நிலைக்குக் கொண்டு செல்ல சதியா என்று மொட்டுக் கட்சி கேள்விக்கணை

“போர்காலத்தில் புலிகள் கூட அலுவலகங்களுக்குள் புகுந்து தமது எதிரிகளைக் கொலை செய்யவில்லை. போர்க் காலத்தை விடவும் தற்போது பயங்கரமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“வெலிகம துப்பாக்கிச்சூட்டுச் சம்பவமானது படு பயங்கரமாகும். தமக்குப் பாதுகாப்பு வேண்டும் என்று துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த தவிசாளர் லசந்த விக்கிரமசேகர கோரிக்கை விடுத்திருந்த போதிலும் அது வழங்கப்படாத சூழ்நிலையிலேயே அவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நாட்டில் 30 வருடகாலம் போர் நிலவியது. இந்தக் காலப்பகுதியில் புலிகள் கூட இவ்வாறு அச்சமின்றி அலுவலகங்களுக்குள் புகுந்து தமது எதிரிகளை கொல்லவில்லை. ஆனால், ஜே.வி.பி. ஆட்சியின் கீழ் அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டுள்ளது. இது ஜனநாயகத்துக்குப் பாரிய அச்சுறுத்தமாகும்.

நாட்டைஅராஜகநிலைக்குக்கொண்டு செல்வதற்காகப்பாதாளக்குழு என்றபோர்வையில் தமக்கு தேவையானவற்றை நிறைவேற்றிக் கொள்வதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றதா என்ற சந்தேகம் நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

மக்கள் நாய், பூனைகள்போல சுட்டுக்கொல்லப்படுவதை அனுமதிக்க முடியாது. பாதாளக் குழுக்களை ஒடுக்குகின்றோம் என்ற போர்வையில் அக்குழுக்கள் பலப்படுத்தப்படுகின்றனவா என்ற சந்தேகமும் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.” – என்றார்.

# சிறுநீரகம் செயலிழந்ததால் இளம் குடும்பஸ்தர் மரணம்

ஈரல் மற்றும் சிறுநீரகம் செயலிழந்ததால் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் மந்நிகை, பருத்தித்துறையைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான குணசேகரம் மரியதாஸ் (வயது 30) என்ற இளம் குடும்பஸ்தராவார்.

உடல் நலக்குறைவு காரணமாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் 14ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில், நேற்று முன்தினம் வியாழக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை பருத்தித்துறை பொலிஸார் நெறிப்படுத்தினர்.

## பட்டப்பகலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

போதைப்பொருள் பாவனையை இல்லாதொழிப்பதற்கும், பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் தேசிய மக்கள் சக்தி அரசு நாடளாவிய ரீதியில் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. அதன்படி பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் பலர் கைது செய்யப்பட்டு வரும் அதேவேளை, மறுபுறம் பாதாள உலகக் குழுவினர் என அடையாளப்படுத்தப்படும் பலர் பொதுவெளியில் கொல்லப்படும் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன.

அதுமாத்திரமன்றி அரசு பொது வெளியில் நிகழும் இவ்வாறான படுகொலைகளை பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் கொல்லப்படுவதாகக் கூறி நியாயப்படுத்தி வரும் போக்கு தொடர்பில் பலரும் கண்டனங்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் இது பற்றிக் கருத்துரைத்த ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன், பாதாள உலகக் குழுக்கள் மற்றும் போதைப்பொருள் பாவனைக்கு எதிராக தேசிய மக்கள் சக்தி அரசால் முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளைத் தாம் வரவேற்பதாகக் குறிப்பிட்டார்.

இருப்பினும் அதனைக் காரணமாகக் கூறி பொது வெளியில் பட்டப்பகலில் இடம்பெறும் படுகொலைகளை நியாயப்படுத்துவதற்கு அரசு முற்படுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், மாறாக சட்டம், ஒழுங்கை உரியவாறு பேண வேண்டிய கடப்பாடு அரசுக்கு இருக்கின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் இந்த வருடத்தில் இதுவரை சுமார் 50 இற்கும் மேற்பட்ட இவ்வாறான கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன எனவும், இனிவரும் காலங்களில் இத்தகைய சட்டவிரோத படுகொலைகள் இடம்பெறுவதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சுமந்திரன் வலியுறுத்தினார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பாடசாலை நேரம்

சமூகத்துக்குக் கல்வி கண் திறப்பவர்கள் ஆசிரியப் பெருந்தகைகள்தான். அதனால் அவர்களுக்கு சமூகத்தில் தெய்வத்துக்கு ஒப்பான மதிப்பும் மரியாதையும் உண்டு.

பெரும்பாலும் அரச ஊழியர்களான ஆசிரியர்களுக்கு உரிய வேதனம் வழங்கப்படுவதில்லை என்ற கவலை நாடளாவிய ரீதியில் இருக்கின்றது. சம்பள வேறுபாடு மற்றும் அது போன்ற இன்னோரன்ன பிரச்சினைகளில் நாடும் சமூகமும் ஆசிரியர்களைப் பரிவோடும் பாதிக்கப்பட்ட தரப்பாகவும் எப்போதும் நோக்குவது வெளிப்படையானதுதான்.

ஆனால் அதற்காக ஆசிரியப் பெருந்தகைகள் - கல்விக்கண் திறப்போர் - சின்னத்தனமாக நடந்து விட முடியாது. நடந்து விடக் கூடாது.

அரச சேவைகளிலேயே அதிக அளவு விடுமுறை வசதி கொண்டவர்களாக ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்ற கணிப்பீடு மக்கள் மத்தியில் உண்டு. வாரம் தோறும் சனி, ஞாயிறு மற்றும் பொது விடுமுறைகள், தவணை விடுமுறைகள், அரசு ஊழியர்கள் என்ற முறையில் வருடம் தோறும் ஒதுக்கீடு செய்யப்பட்ட பிற விடுமுறைகள் என்று தாராளமான விடுமுறைகள் அவர்களுக்கு இருக்கின்றன. இந்த விவகாரம் - ஆசிரியர்களுக்கு தாராள விடுமுறைகள் உண்டு என்ற விடயம் - அவ்வப்போது பேசுபொருளாகவும் பேசப்படுவதுண்டு.

கல்வி பயிலும் சிறாருக்கு - மாணவருக்கு - நெருக்கடி அதிகரிக்கக் கூடாது என்ற அடிப்படையில் கணிசமான விடுமுறைகள் அவர்களுக்கு அளிக்கப்படுகின்றன. அளிக்கப்பட வேண்டும். அதனால், அந்த வாய்ப்பு, கற்றல் - கற்பித்தலில் நேரடியாகச் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கும் கிட்டுகின்றது.

அவற்றையும் கவனத்தில் எடுத்து ஆசிரியர்கள் தங்கள் கோரிக்கைகளையும் போராட்டங்களையும் முன்வைப்பதுதான் பொருத்தமானது.

2026ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரவுள்ள கல்வி சீர்திருத்தங்களின் கீழ், பாடசாலை நேரத்தை 30 நிமிடங்கள் நீடிக்கும் அரசாங்கத்தின் முடிவை ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் தொழிற்சங்கக் கூட்டணி கடுமையாக எதிர்த்துள்ளது என்று இப்போது செய்திகள் வெளியாகியுள்ளன.

நேற்று கொழும்பில் ஒரு செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய தொழிற்சங்க பிரதிநிதிகள், நவம்பர் 7ஆம் திகதிக்கு முன்னர் அதிகாரிகள் தமது இந்த முடிவைத் திருத்தத் தவறினால், வரவிருக்கும் பாடசாலைப் பருவத்தின் தொடக்கத்தில் ஒரு நாள் வேலைநிறுத்தத்தைத் தொடங்குவோம் என்று எச்சரித்தனர்.

கல்வியாளர்களுடன் முறையான ஆலோசனை இல்லாமல் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தொழிற்சங்கத் தலைவர்கள் வாதிட்டனர். மேலும் நீட்டிக்கப்பட்ட நேரம் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இருவருக்கும் கூடுதல் சுமையை ஏற்படுத்தும் என்கின்றனர் அவர்கள்.

ஆசிரியர்களின் கவலைகளைத் தொடர்ந்து புறக்கணிப்பது கல்வித் துறையில் பரந்த தொழிற்சங்க நடவடிக்கைக்கு வழிவகுக்கும் என்று எச்சரித்த அவர்கள், இந்த நடவடிக்கையை மறுபரிசீலனை செய்யவும், பங்குதாரர்களுடன் கலந்துரையாடல்களில் ஈடுபடவும் கல்வி அமைச்சிடம் வலியுறுத்தினர்.

பொதுமக்களும், மாணவர்களின் பெற்றோருமே இந்த விடயத்தில் பிரதான பங்குதாரர்கள் என்பதையும் தொழிற்சங்கத் தலைவர்கள் மறந்துவிடாது இருப்பது நல்லது.



# புயலாக வலுவடைகிறது புதிய காற்றழுத்த தாழ்வு!

## தமிழகத்தில் 28 ஆம் திகதி வரை கனமழை வாய்ப்பு

வங்கக் கடலில் புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளதாகவும், இது ஒக்டோபர் 27 ஆம் திகதி புயலாக வலுப்பெறக் கூடும் என்றும், இதன் காரணமாக தமிழகத்தில் சில மாவட்டங்களில் இன்று முதல் 28 ஆம் திகதி வரை கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில்,

தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் நிலவிய வளிமண்டல மேலடுக்கு சுழற்சியின் காரணமாக, தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளது. இது, மேற்கு – வடமேற்கு திசையில் மெதுவாக நகர்ந்து, இன்று தென்கிழக்கு மற்றும் அதனை ஒட்டிய மத்திய வங்கக் கடல் பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறும். பின்னர், 26 ஆம் திகதி ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும், 27 ஆம் திகதி காலை, தென்மேற்கு மற்றும் அதனை ஒட்டிய மத்தியமேற்கு வங்கக் கடல் பகுதிகளில் புயலாகவும் வலுவடையக்கூடும்.

அரபிக் கடலில் நிலவும், காற்றழுத்த தாழ்வு மண்டலம், இன்று வடக்கு – வடகிழக்கு திசையில் மத்திய கிழக்கு அரபிக் கடல் பகுதிகளை கடந்து நகரக்கூடும். இதன் காரணமாக இன்று முதல் 27 ஆம் திகதி வரை தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், 28 முதல் 30 ஆம் திகதி வரை ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# எடப்பாடி பழனிசாமி தலைமையை விஜய் ஏற்பது தற்கொலைக்கு சமம்

## டி.டி.வி. தினகரன் கூறுகின்றார்





அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையை த.வெ.க. விஜய் ஏற்றுகொள்வது தற்கொலைக்கு சமம் என அ.ம.மு.க. பொதுச் செயலாளர் டி.டி.வி..தினகரன் தெரிவித்தார்.

விடுதலை போராட்ட வீரர்கள் மருது சகோதரர்கள் நினைவுதினத்தில் நேற்று அ.ம.மு.க. பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் அவரது சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“டெல்டா மாவட்டங்களில் மழை வெள்ளத்தால் நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டன. துயரத்தில் இருக்கும் விவசாயிகளுக்கு தமிழக அரசு உரிய இழப்பீடு வழங்க வேண்டும். அரசு படிப்படியாக மதுக்கடைகளை குறைத்து, மது இல்லா தமிழகத்தை உருவாக்க வேண்டும்.

2026 தேர்தலில் நான்கு முனை போட்டி உருவாக வாய்ப்பு உள்ளது. அமமுக தமிழக அரசியலில் தவிர்க்க முடியாத சக்தியாக வளர்ந்துள்ளது. இந்த ஆண்டு இறுதியில் கூட்டணி குறித்து தெரிவிப்போம். எங்கள் கூட்டணிதான் வெற்றி பெறும். விஜய் தலைமையில் ஒரு கூட்டணி அமையும் என்று தான் கூறினேன். விஜய் கூட்டணிக்கு செல்வோம் என்று நான் சொல்லவே இல்லை. அரசியலில் அனுபவத்தை விட, மக்கள் யாரை ஏற்று கொள்கின்றனர் என்பதுதான் முக்கியம். அரசு சரியாக செயல்பட்டால் வரவேற்பதும், சரியில்லை என்றால் எதிர்த்து குரல் கொடுப்பதும் எங்களது கொள்கை.

பழனிசாமியும், அவரை சேர்ந்தோரும் தமிழகத்தில் பரிதாபநிலையில் உள்ளனர். எம்.ஜி.ஆர், ஜெயலலிதா கட்டிக் காத்த அ.தி.மு.க. இன்று இல்லை. பழனிசாமி அ.தி.முகவாக உள்ளது. அவரால் ஆட்சிக்கு வர முடியாது என்று தெரிந்தும், எங்களோடு கூட்டணிக்கு வாங்கள் என்று மற்றவர்களை அழைப்பதை தமிழக மக்கள் நகைப்பாக பார்க்கின்றனர். காலில் விழுந்து பதவி பெற்றுவிட்டு காலை வாரியவர் பழனிசாமி. பழனிசாமி துரோகத்துக்கு அவர் வீழ்த்தப்படுவார்.

தேர்தல் நேரத்தில் வியப்பை ஏற்படுத்தும் வகையில் கூட்டணிகள் அமையும். ரஜினியை போன்று விஜய் உச்ச நடிகர். வருமானத்தை விட்டு, மக்களுக்கு சேவை செய்ய வந்த அவர், தனது தலைமையில் தான் கூட்டணி அமைப்பார். ஆனால் கூவிக் கூவி அழைக்கும் பழனிசாமியை தோளில் தூக்கி வைத்துக்கொள்ள மாட்டார் விஜய். பழனிசாமி தலைமையை விஜய் ஏற்றுகொள்வது தற்கொலைக்கு சமம்.” என்று தெரிவித்தார்.

# கரூரில் உயிரிழந்தோர் குடும்பத்தினரை பனையூரில் சந்திப்பதற்கு விஜய் திட்டம்



கரூரில் த.வெ.க. பிரச்சாரக் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த 41 பேரின் குடும்பத்தினரை பனையூருக்கு வர வழைத்து சந்திக்க த.வெ.க. தலைவர் விஜய் திட்டமிட்டுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

கரூரில் கடந்த செப்ரெம்பர் .27 இல் நடந்த த.வெ.க. பிரச்சாரக் கூட்ட நெரிச லில் சிக்கி 41 பேர் உயிரிந்தனர். 110 பேர் காயமடைந்தனர். உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை த.வெ.க. தலைவர் விஜய் மற்றும் நிர்வாகிகள் நேரில் சந்தித்து ஆறுதல் கூறவில்லை என்று தொடர்ந்து விமர்சனங்கள் எழுந்தன. இதற்கிடையில், கடந்த 18 ஆம் திகதி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் வங்கிக் கணக்கில் தவெக சார்பில் தலா 20 லட்சம் இந்திய ரூபா வரவு வைக் கப்பட்டது.

இந்நிலையில், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை சென்னை பனையூரில் உள்ள கட்சி அலுவலகத்துக்கு வரவ ழைத்து சந்திக்க விஜய் திட்டமிட்டுள்ளார் என கூறப்படுகிறது.

இதற்காக, பாதிக்கப்பட்ட குடும்பத் தினரை இன்று தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய உள்ளூர் த.வெ.க. நிர் வாகிகள், "கரூரில் மண்டபம் கிடைக்காத தால் விஜய் வரமுடியவில்லை. இதனால், பனையூரில் உள்ள அலுவலகத்தில் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பேருந்து வசதி செய்து கொடுத்தால் வருவீர்களா?" என்று கேட்டறிந்தனர். எனி னும், இதற்கான திகதி இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்று கூறப்படு கிறது.

இது குறித்து கரூர் சிவசக்தி நகரை சேர்ந்த ஆனந்தஜோதி (கூட்ட நெரிசலில் மனைவி, இரு மகள்களை பறிகொடுத் தவர்) கூறும்போது,

"த.வெ.க. நிர்வாகிகள் தொலைபேசி யில் தொடர்பு கொண்டு, கரூரில் மண்டபம் கிடைக்காததால், விஜய் உங்களை சென் னைக்கு வரவழைத்து சந்திக்க விருப்பப் படுகிறார். எனவே, சென்னைக்கு வர விருப்பமா என கேட்டனர். பார்க்கலாம் என்று கூறியுள்ளேன்." என்றார்.






# ரஷ்யாவுக்கு உதவும் வகையில் செயல்பட்டிருந்த 45 நிறுவனங்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் தடை

ரஷ்ய இராணுவத்திற்கு உதவும் வகை யில் செயல்பட்ட மூன்று இந்திய நிறு வனங்கள் உட்பட 45 நிறுவனங்க ளுக்கு, ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித் துள்ளது.

கிழக்கு ஐரோப்பிய நாடான உக் ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ளது. மூன்று ஆண்டுகளுக்கு மேலாக இந்த போர் நடந்து வரும் நிலையில், இரண்டு தரப்பிலும் ஏராளமான உயிரி ழப்புகள், பலத்த சேதம் ஏற்பட்டுள் ளது.

இந்தப் போரை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர அமெரிக்கா மற்றும் ஐரோப் பிய நாடுகள் தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக ரஷ்யாவிற்கு அழுத்தம் தரும் வகையில், ஐரோப்பிய ஒன்றியம் அந்த நாட்டின் மீது பொருளா தார தடைகளை விதித்தது.

இதற்கிடையே, ரஷ்யாவிற்கு பொரு ளாதார ரீதியில் உதவும் நிறுவனங்கள் மீதும் இந்தத் தடையை ஐரோப்பிய ஒன் றியம் நீட்டித்து வருகிறது.



# காசாவை இனி ஹமாஸ் ஆட்சி செய்ய முடியாது

## அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் தகவல்

காசாவை இனி ஹமாஸ் ஆட்சி செய்யவே முடியாது என அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் மார்கோ ரூபியோ தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் அமைப்பினர் ஆயுதங்களைக் கட்டாயம் கைவிட வேண்டும் என மார்கோ ரூபியோ கூறியுள்ளார்.

காசாவின் எதிர்கால நிர்வாகத்தை இஸ்ரேலும், அதன் நட்பு நாடுகளும் தான் வகுக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஆயுதங்களை கைவிட ஹமாஸ் மறுத்தால் அது ஒப்பந்தத்தை மீறுவதாகும் என மார்கோ ரூபியோ குறிப்பிட்டார்.

காசா மக்கள் ஹமாஸ் அமைப்பால் அச்சப்படாமல் இருக்க, அவர்கள் சிறந்த எதிர்காலத்தைப் பெற அமெரிக்கா உதவ விரும்புவதாக அவர் கூறினார்.

# ஏ.ஐ. தொழில் நுட்பத்தால் 600 ஊழியர்கள் பணிநீக்கம்




மெட்டா நிறுவனம் தற்போது சுமார் 600 ஊழியர்களை பணிநீக்கம் செய்ய உள்ளதாக தெரிவித்துள்ளது.

ஏ.ஐ. தொழில் நுட்பம் வந்த பின்னர் பல துறைகளில் பணியாற்றும் ஆயிரக் கணக்கான ஊழியர்களை நிறுவனங்கள் பணிநீக்கம் செய்து வருகிறது.

நிறுவன மறுசீரமைப்பு நடவடிக்கையாக மெட்டாவில் பணிபுரியும் சுமார் 600 ஊழியர்களை பணிநீக்கம் செய்யவுள்ளதாக அந்த நிறுவனத்தின் ஏ.ஐ. பிரிவு தலைமை அதிகாரி அலெக் சாண்டர் வாங் தெரிவித்துள்ளார்.

மெட்டா நிறுவனத்தின் இந்த அறிவிப் பால் ஏ.ஐ. உள்கட்டமைப்பு அலகுகள், அடிப்படை செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சி பிரிவு மற்றும் பிற தயாரிப்பு தொடர்பான பதவிகளில் உள்ள ஊழியர்கள் பாதிக்கப்படுவார்கள்.

இந்த ஆண்டு தொடக்கத்தில் ஏ.ஐ. பிரிவில் புதிதாக 50 பேரை பணிக்கு அமர்த்தி, வருடக் கணக்கில் பணியாற்றி வந்தவர்களை பணிநீக்கம் செய்தமை குறிப்பிடத்தக்கது.







# 2026 ஒதுக்கீட்டுச் சட்டமூலத்திற்கு அரசாங்க நிதி பற்றிய குழு அனுமதி

2026ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்திற்கு அரசாங்க நிதி பற்றிய குழுவில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்க நிதி பற்றிய குழு அதன் தலைவர் ஹர்ஷ டி சில்வா தலைமையிலான குழு நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் கூடியது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட நிதி அமைச்சின் அதிகாரிகள், 2026 ஆம் ஆண்டு ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தில் ஒவ்வொரு துறைக்கும் மேற்கொள்ளப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகள் மற்றும் எதிர்கால இலக்குகள் குறித்த விபரங்களை தெரிவித்தனர்.

அதன்படி, 2026 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு (வரவுசெலவுத்திட்ட உறை) நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதியினால் எதிர்வரும் நவம்பர் 07ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.







# கணேமுல்ல சஞ்சீவ குறித்த வழக்கில் 27 சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல்

கணேமுல்ல சஞ்சீவ கொலை வழக்கில் தொடர்புடைய 27 சந்தேகநபர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

பிரதான நீதவான் அசங்க எஸ். போதரகம முன்னிலையில் இது தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த விசாரணையின்போது, நான்கு சந்தேக நபர்கள் திறந்த நீதிமன்றில் நேரடியாக முன்னிலையாக்கப்பட்டனர்.

அதே நேரத்தில் தற்போது பூசா சிறையில் அடைக்கப்பட்டுள்ள மீதமுள்ள சந்தேகநபர்கள், இணையதொழில்நுட்பம் ஊடாக மன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டனர்.

# 2026 இல் வாகன இறக்குமதி சாதாரண நிலைக்குத் திரும்பும்

## மத்திய வங்கியின் ஆளுநர் நம்பிக்கை



இலங்கையில் வாகன இறக்குமதிகள், 2026 ஆம் ஆண்டில் சாதாரண நிலைக்குத் திரும்பும் என்று மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்டிருக்கும் கேள்வியின் அடிப்படையில், 2025 ஆம் ஆண்டுக்குள், இலங்கையர்கள் வாகன இறக்குமதிக்கு சுமார் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிடுவார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

இது, ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட ஒரு பில்லியன் டொலரை விட அதிகமாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனிடையில், வாகன இறக்குமதி வரிகளைக் கொண்டு இந்தமுறை, வரவு செலவு திட்ட பற்றாக்குறையை நிவர்த்திக்க முடியும் என்றும் மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

# லொக்கு பெட்டி, ஷாமன் ஆகியோரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு



போதைப்பொருள் கடத்தல்காரர் “லொக்கு பெட்டி“ மற்றும் அவருக்கு உதவியதாக குற்றம் சாட்டப்பட்ட ஷாமன் ஆகியோரை ஒக்டோபர் 31 ஆம் திகதி வரை காவலில் வைக்க கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

பிரதான நீதவான் அசங்க எஸ். போதரகம, இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

நேற்றைய வழக்கு விசாரணையின் போது லொக்கு பெட்டி ஸூம் மூலம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

அதே நேரத்தில் தினேஷ் குமார் என அடையாளம் காணப்பட்ட ஷாமன் நேரில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போது, இருவருக்கும் எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக பொலிஸார் நீதிமன்றத்துக்கு அறிவித்தனர்.

அத்துடன், போதைப்பொருள் கடத்தலில் இருந்து பெறப்பட்ட நிதி ஷாமனின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, இருவரையும் காவலில் வைக்க கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.



# என் உயிருக்கு ஆபத்தா?

## சபையில் கவலை வெளியிட்ட சஜித் அணி எம்.பி. ஜகத் விதான

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விதான நேற்று நாடாளுமன்றத்தில் கொலைத் திட்டங்கள் மற்றும் தனது உயிருக்கு அச்சுறுத்தல்கள் இருப்பதாகக் கூறப்படுவது குறித்து கவலை தெரிவித்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர், இந்த விவகாரம் குறித்து விசாரணை நடத்துமாறு களுத்துறை பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு, பொலிஸ்மா அதிபர் அறிவித்துள்ளார் என்றும் குறிப்பிட்டார்.

"வாகனத்தில் இருந்து இறங்கும் போது என்னைப் படுகொலை செய்யத் திட்டமிட்டுள்ளதாகக் கடிதம் மூலம் பிரதிப் பொலிஸ்மா அதிபருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரின் பெயரும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சுட்டுக் கொல்லப்படுவேன் என்று அதில் கூறப்பட்டுள்ளது." - என்றும் அவர் கூறினார்.

இந்த விவகாரம் குறித்து விசாரிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விதான நாடாளுமன்றத்தையும், அரசையும் கேட்டுக்கொண்டார்.

அவரது முறையீட்டுக்குப் பதிலளித்த பிரதி சபாநாயகர், இந்த விடயம் சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்படும் என்றும், சபாநாயகரிடம் தனது கோரிக்கையை எழுத்துபூர்வமாக முன்வைக்குமாறும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானவிடம் தெரிவித்தார்.

## 9 மாவட்டங்களுக்குத் தொடரும் மண்சரிவு அபாய எச்சரிக்கை!




இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலையால் சில மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, கொழும்பு, களுத்துறை, காலி, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தளை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை, தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

## சட்டவிரோத பிரமிட் திட்டத்தை நடத்திச் சென்ற 07 பேர் கைது

சட்டவிரோத பிரமிட் திட்டத்தை நடாத்திச் சென்ற 07 சந்தேகநபர்கள் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிரமிட் திட்டத்தை நடாத்திச் செல்லுதல், ஊக்குவித்தல் மற்றும் அந்த திட்டத்தை முகாமைத்துவம் செய்தல் ஆகிய விடயங்கள் தொடர்பில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்மலானை, பன்னிப்பிட்டிய, கல்னேவ, ஹோகந்தர, பேராதனை, கொழும்பு 04 ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 40 மற்றும் 64 வயதுகளுக்கு உட்பட்ட சந்தேகநபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

நிதிக் குற்ற விசாரணைப் பிரிவினர் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக 2,500 ரூபா அவசியம்

## ஐக்கிய சோஷலிசக் கட்சி வலியுறுத்து

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 2 ஆயிரத்து 500 ரூபா வழங்கப்பட வேண்டும் என்று ஐக்கிய சோஷலிசக் கட்சியின் பொதுச்செயலாளர் சிறிதுங்க ஜயசூரிய வலியுறுத்தினார்.

வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள சூழ்நிலையில் நாள் சம்பளமாக ஆயிரத்து 700 ரூபாவை நிர்ணயிப்பது அநீதி எனவும் ஊடகங்களிடம் அவர் சுட்டிக்காட்டினார்.

மலையக மக்களுக்கு காகிதங்களை வழங்கிக் கொண்டிருக்காமல், காணி உரிமையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும், இது தொடர்பில் தனது பாதீட்டு உரையில் ஜனாதிபதி தெளிவுபடுத்த வேண்டும் எனவும் சிறிதுங்க ஜயசூரிய மேலும் குறிப்பிட்டார்.



# அமைச்சர் கருணாதிலக இந்தியாவுக்குப் பயணம்




துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அனுர கருணாதிலக, இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

மும்பையில் நடைபெறும் 2025 ஆம் ஆண்டுக்கான இந்திய கடல்சார் வாரத்தில் பங்கேற்க ஒக்டோபர் 27 முதல் 28 ஆம் திகதி வரை அவர் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்வார் எனக் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது.

இந்தியத் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வு, மும்பை கண்காட்சி மையத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில், துறைமுக உள்கட்டமைப்பு, தளபாடங்கள் மற்றும் நிலையான கடல்சார் வளர்ச்சியில் முன்னேற்றங்கள் குறித்து உலகளாவிய கடல்சார் தலைவர்கள், தொழில்துறை பிரதிநிதிகள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் ஒன்றிணைந்து கலந்துரையாடல்களில் ஈடுபடுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயணத்தின் போது, துறைமுகங்கள் அபிவிருத்தி, கப்பல் போக்குவரத்து மற்றும் தளபாடங்களில் இரு நாடுகளுக்கும் இடையே ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக, அமைச்சர் அனுர கருணாதிலக, இந்திய துறைமுகங்கள், கப்பல்துறை, நீர்வழிகள் அமைச்சர் சிறிசர்பானந்த சோனோவாலுடன் இருதரப்பு பேச்சுகளை நடத்தவுள்ளார்.

இந்திய கடல்சார் வாரத்தின் அமைச்சர்கள் கூட்டத்தில் அவர் கலந்துகொள்வதுடன், கடல்சார் மற்றும் தொழில்துறை துறைகளைச் சேர்ந்த முன்னணி பிரமுகர்களையும் சந்திப்பார்.

அமைச்சரின் வருகையின் ஒரு பகுதியாக முக்கிய தள பயணங்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

ஒக்டோபர் 27 முதல் 31 வரை நடைபெறும் இந்திய கடல்சார் வாரம், சர்வதேச ஒத்துழைப்பை வளர்ப்பதற்கும், துறைமுக நடவடிக்கைகளை நவீனமயமாக்குவதற்கும், கப்பல் போக்குவரத்து மற்றும் தளபாடங்களில் உலகளாவிய முதலீட்டை ஈர்ப்பதற்கும் ஒரு முக்கிய தளமாகச் செயற்படும் என்றும் இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அமைச்சரின் பங்கேற்பு, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான ஆழமான பொருளாதார கூட்டாண்மையையும், வர்த்தகம், தளவாடங்கள் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான அவர்களின் பகிரப்பட்ட அர்ப்பணிப்பையும் எடுத்துக் காட்டுகின்றது என்றும் இந்தியத் தூதரகத்தின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மாந்தை கிழக்குப் பிரதேசசபை அமர்வில் குழப்பம் உறுப்பினர்கள் வெளிநடப்பால் கூட்டம் ஒத்திவைப்பு

(பா.சதீசன்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்றையதினம் தவிசாளர் இராசையா நளினி தலைமையில் இடம்பெற்று கொண்டிருந்தபோது, ஆரம்பத்திலிருந்தே அமளி நிலவிய நிலையில் சபை உறுப்பினர்கள் சிலர் சபையை புறக்கணித்து வெளிநடப்புச் செய்துள்ளனர்.

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியை சேர்ந்த சத்தியமூர்த்தி சத்தியவரதன் (உப தவிசாளர்), செல்லையா அமிர்தலிங்கம், தமிழரசுக் கட்சியை சேர்ந்த வைரமுத்து ஜெயரூபன், சிவஞானசுந்தரம் நிக்சன் மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியை சேர்ந்த நடராசா மகிந்தன் ஆகியோரே வெளிநடப்பு செய்தனர்.

13 உறுப்பினர்களை கொண்ட இச்சபையின் நேற்றைய அமர்வில் 10 உறுப்பினர்கள் மட்டுமே கலந்து கொண்டிருந்த நிலையில், அவர்களில் ஐவர் வெளிநடப்புச் செய்தமையையடுத்து பெரும்பான்மை இல்லாத காரணத்தால் சபைக் கூட்டத்தை நடத்த முடியாது என தவிசாளர் அறிவித்து, கூட்டத்தை 15 நாள்களுக்குப் பிற்போட்டார்.

வெளிநடப்பு செய்த உறுப்பினர்கள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது –

இப்போது சபையின் 4ஆவது அமர்வு நடைபெறுகிறது. ஆனால், இதற்கு முன் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. சபை உறுப்பினர்கள் முன்வைத்த கோரிக்கைகள் திணைக்களங்களுக்கு அனுப்பப்படாதமையுடன், அவற்றை செயல்படுத்துவதிலும் தவிசாளர் அலட்சியம் காட்டி வருகிறார். அடுத்த 14 நாள்களுக்குள் முன்னர் எடுக்கப்பட்ட தீர்மானங்களை உரிய தரப்புகளுக்கு அனுப்பினால் அடுத்த அமர்வில் கலந்துகொள்வோம்." – எனத் தெரிவித்தனர்.

உப தவிசாளருக்கு எந்தவித பொறுப்புகளும் வழங்கப்படவில்லை. தவிசாளர் தன்னிச்சையாக அனைத்து பொறுப்புக்களையும் தன்னகத்தே வைத்துள்ளார். மக்களுக்கான அபிவிருத்தி செயற்பாடுகள் முன்னேறாத நிலை நிலவுகிறது.

எந்தவித கட்சி பேதமின்றி அனைவரும் ஒன்றிணைந்து மக்களுக்கான அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுக்க முயன்றவேளை மாந்தை கிழக்கு பிரதேச சபையின் செயலாளர், தவிசாளரையும் இணைத்து தன்னிச்சையாக செயற்பட்டு எந்தவொரு அபிவிருத்தி வேலையையும் செய்ய விடாது புறக்கணித்து வருகின்றார் எனவும் குற்றம்சாட்டினர்.

கடந்த கூட்டத்தில் 40,500 ரூபா சபையில் அனுமதி கோரப்பட்ட தொகை இன்றைய (நேற்றைய) அமர்வு அறிக்கையில் ஒரு லட்சம் ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. இது மோசடியை உணர்த்துகிறது எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் வடமாகாண ஆளுநரை சந்தித்து இது தொடர்பாக கலந்துரையாடி மாந்தை கிழக்கு பிரதேசசபை செயலாளரை மாற்றி தருமாறும் சபையின் செயற்பாடுகளை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாதுள்ளது எனக் கேட்டபோது தவிசாளர் அதில் பொறுப்பேற்க மறுத்தார் என்றனர் அவர்கள்.

மாந்தை கிழக்கு பிரதேசசபை பின் தங்கிய நிலையில் உள்ளது. அதனை முன்னோக்கி கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழரசுக் கட்சியின் தலைமைகள். அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

13 உறுப்பினர்களை கொண்ட மாந்தை கிழக்கு பிரதேசசபையில், தமிழரசுக் கட்சி 4 உறுப்பினர்களையும், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி தலா 2 உறுப்பினர்களையும், ஐக்கிய மக்கள் சக்தி 3 உறுப்பினர்களையும், தேசிய மக்கள் சக்தி 2 உறுப்பினர்களையும் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.









# மட்டு. மீனவ சங்கங்களுக்குரிய எரிபொருள் நிலையங்களை பறிக்கும் வேலையில் சில தரப்புகள் ஈடுபடுவதாகக் கண்டனம்

## கிழக்கு மீனவர் தொழிற் சங்கத்தின் தலைவர் இரத்தினம் பத்மநாதன் குற்றச்சாட்டு




(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மீனவர்களின் வளர்ச்சிக்கு என கடந்த காலத்தில் மீனவர் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட மண்எண்ணை எரிபொருள் நிரப்பு நிலையங்களை பறித்து, மீனவர்களின் வயிற்றில் அடித்து, பிரதேச சபைக்கு வழங்குவதற்கு சிலர் நாசகார வேலையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த செயற்பாட்டை வன்மையாகக் கண்டிக்கின்றமையுடன் வடக்கு, கிழக்கு மீனவர் தொழிற்சங்கங்கள் இணைந்து பாரிய போராட்டத்தில் ஈடுபடுவோம் என கிழக்கு மாகாண மீனவர் தொழிற் சங்கத்தின் தலைவர் ரத்தினம் பத்மநாதன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு 'வெய்ஸ் ஒவ் மீடியா' கற்கை நிலையத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக மாநாட்டில் முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட மீனவர் சங்கத்தின் தலைவரும், கிழக்கு மாகாண மீனவர் தொழிற்சங்கத்தின் தலைவருமான இரத்தினம் பத்மநாதன், பாலமீன்மடு திராய்மடு மீனவர் கூட்டுறவு சங்க செயலாளர் ஜெயந்தீஸ் ரூபசேனவும் கலந்து கொண்டு இவ் விடயத்தைத் தெரிவித்தனர். அவர்கள் கூறியவை வருமாறு:-

கடந்த காலத்தில் மீன்பிடி அமைச்சராக இருந்த ராஜித சேனாரத்தின மட்டக்களப்பு மாவட்டத்தில் பல மில்லியன் ரூபா செலவில் கல்லாறு, காத்தான்குடி, பாலமீன்மடு, களுவங்கேணி கடற்கரை பகுதியில் மீனவர்களின் வளர்ச்சிக்காக ஒரு மண்எண்ணை எரிபொருள் நிரப்பு நிலையங்களை அமைத்து அந்தந்தப் பகுதி மீனவ சங்கங்களிடம் கையளித்தார்.

இவ்வாறு அமைக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பாலமீன்மடு, களுவங்கேணி ஆகிய இரண்டு மட்டும் இயங்கி கொண்டிருக்கின்றன. கல்லாறு, காத்தான்குடி ஆகிய இரண்டும் இயங்காமல் பழுதடைந்து துருப்பபிடித்து பாழடைந்து கிடக்கின்றன.

இந்த நிலையில் பாலமீன்மடு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அந்த பகுதியில் உள்ள 300 படகுகளுக்கு மேற்பட்டவை பயன் பெற்று வருகின்றன. அதேபோல் களுவங்கேணி எரிபொருள் நிரப்பு நிலையத்தினால் அந்த பகுதி மீனவர்கள் நன்மையடைந்து வருகின்றனர்.

நான் தலைவராக இருந்தபோது தான் இவை தரப்பட்டன. இதனை நாங்கள் தனிநபர் ஒருவருக்கு குத்தகைக்கு கொடுத்து, அதில் வரும் வருவாயில் மீனவர் குடும்பத்தில் ஒருவர் உயிரிழந்தால் மரண செலவுக்கு பணம் வழங்கி வருகின்றோம். அது மட்டுமல்ல பாடசாலை மற்றும் விளையாட்டு கழகங்களின் வளர்ச்சிக்காகவும் நிதி வழங்கி வருகின்றோம்

பாலமீன்மடு ஒரு பெரிய கிராமம். அங்கு ஒரு மாதத்தில் 3 மரணச் சம்பவங் இடம்பெறுகின்றன. ஒரு மரணசடங்கிற்கு 10 ஆயிரம் ரூபாவை வழங்க வேண்டியுள்ளது. இவ்வாறான நிலையில் மீனவர் சங்கத்துக்கு வருவாயாக வரும் இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தைப் பறித்து, மீனவர்களின் வயிற்றில் அடித்து, பிரதேச சபைக்கு அதனை வழங்குவதற்கு சிலர் நாசகார வேலை செய்துவருகின்றனர். அந்தச் செயற்பாட்டை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

மத்திய அரசில் இருந்து வழங்கப்பட்ட இந்த எரிபொருள் நிரப்பு நிலையங்கள் எங்கள் கையில் இருந்து பறிபோகுமாக இருந்தால் நாங்கள் கிழக்கு மாகாணம் மட்டுமல்ல, வடக்கு மாகாண மீனவர் தொழிற்சங்கமும் ஒன்றிணைந்து பாரிய எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபடுவோம். - என எச்சரிக்கை விடுத்துள்ளார்.



# வவுனியாவில் 5 வருடங்களில் 58 பேர் மரணம் இவ்வருடம் 10 மாதங்களில் மட்டும் 18 பேர் பலி

(கி.வசந்தன்)

வவுனியாவில் 2021 ஆம் ஆண்டில் இருந்து தற்போது வரை பல்வேறு விபத்து சம்பவங்களினால் 58 பேர் பலியாகியுள்ளனர்.

விபத்துக்கள் தொடர்பாக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையிடம் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலமாக கேட்கப்பட்ட நிலையில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தத் தரவுகளின் அடிப்படையில் இவ்வருடத்தில் மட்டும் இதுவரை 18 பேர் பலியாகியுள்ளமையுடன், கடந்த வருடங்களை விட விபத்துக்களால் பலியானவர்களின் வீதம் அதிகரித்திருப்பதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

மேலும் கடந்த ஐந்து வருடங்களில் 18 வயதிற்கு குறைந்தவர்கள் இவ் விபத்துக்களினால் 8 பேர் பலியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் காற்றாலைகள் செயல் திட்டத்தை மன்னார் நகரசபை மூலம் கையாளத் திட்டம்

## கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக நடவடிக்கை என்கிறார் நகர முதல்வர்

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் நகர சபை பிரிவில் அமைக்கப்பட்டு வருகின்ற காற்றாலை செயல் திட்டத்திற்கு மன்னார் நகர சபையினால் வழங்கப்படுகின்ற குடிபுகு சான்றிதழை அவர்கள் இது வரை பெற்றுக் கொள்ளவில்லை. அந்தச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளாமல் அவர்கள் தமது செயல்பாட்டை தொடர்ந்து முன்னெடுத்தால் நகர சபை கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன் தெரிவித்துள்ளார்.




மன்னார் நகர சபையில் நேற்று வெள்ளி மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மன்னார் நகர சபை பிரிவில் அமைக்கப்பட்டு வரும் காற்றாலை மின் கோபுரங்களுக்கான அனுமதி நகர அபிவிருத்தி அதிகார சபை வழங்கியுள்ளது. எனினும் மன்னார் நகர சபையிடம் எவ்வித அனுமதியும், ஆலோசனைகளும் பெற்றுக் கொள்ளப்படவில்லை.

சில நிறுவனங்களின் அனுமதியுடன் நகர அபிவிருத்தி அதிகார சபை அனுமதியை வழங்கியுள்ளது. நேற்றைய தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் வினவிய விடயம் என்ன என்றால் 1986 ஆம் ஆண்டு சட்டத்தின் படி, 9 ஆயிரம் சதுர அடிக்கு மேற்பட்ட கட்டடங்களுக்கும், ஒரு ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களிலே முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்தி திட்டங்களுக்கும் நகர அபிவிருத்தி அதிகார சபை அனுமதி வழங்குகிறது.

ஆனால் நகர சபையின் சட்டம் 1939 ஆம் ஆண்டு 255 ஆவது பிரிவு 118 அனுமதியற்ற கட்டடங்களுக்கான அறிவுறுத்தல்களை கொடுக்க வேண்டும் என்றும், 119 அனுமதியற்ற கட்டிடங்களை அகற்ற வேண்டும் என்றும் சொல்லுகின்றன.

ஆனால் மன்னார் நகர சபை பிரிவில் காற்றாலைக்கு வழங்கப்பட்ட அனுமதியில் மன்னார் நகர சபையின் எவ்வித அனுமதியும் இல்லை.

எங்களுடைய 255 பிரிவு 118,119 இன் பிரகாரம் ஏன் இந்தத் திட்டத்திற்கு தடை விதிக்க கூடாது? அல்லது அனுமதியற்ற கட்டிடம் என அகற்ற முடியாதா? என அவர்களிடம் வினவினேன்.

அந்த சந்தர்ப்பத்தில் அவர்கள் பிழையை ஏற்றுக் கொண்டார்கள். இனி வரும் காலங்களில் மதஸ்தலங்கள் உள்ளிட்ட சில கட்டடங்கள் அமைக்கின்ற போது நகர சபையின் அனுமதி மற்றும் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று தீர்மானித்துள்ளனர். மன்னாரில் அமைக்கப்பட்டு வரும் காற்றாலை கோபுரங்களுக்கு 'குடிபுகு சான்றிதழ்' (C.O.C) எடுத்து உள்ளார்களா என்று கேள்வி எழுப்பினேன்.ஆனால் அவர்கள் அச் சான்றுதழை எடுக்கவில்லை.

அந்தச் சான்றிதழ் இல்லாமல் காற்றாலை மின்சாரத்தை உற்பத்தி செய்தல் அல்லது அவர்கள் அமைத்துள்ள கட்டிடங்களை பயண் படுத்துவதையோ முற்றாக தடை செய்ய வேண்டும். நகர சபை சட்டத்தின் ஊடாக 'குடிபுகு சான்றிதழ்' இல்லை என்றால் அந்த செயல் திட்டத்தை தடை செய்கிற அதிகாரம் எமக்கு உள்ளது.

மக்களுக்கு இடையூறாகவும் இடைஞ்சலாகவும் இருக்கின்ற கட்டடங்கள், வீதிகள், மதில்கள் போன்றவற்றை அகற்றுவதற்கான அதிகாரம் மன்னார் நகரசபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

எனவே 'குடிபுகு சான்றிதழ்"'கட்டாயம் அவர்கள் எடுக்க வேண்டும். அச் சான்றிதழ் எடுக்கும் போதே அவர்கள் என்ன கட்டுப்பாடுகளை மீறி உள்ளார்கள் என்பதை பரிசீலித்து பார்க்க முடியும். குறிப்பாக இந்தத் திட்டம் ஊடாக வடிகானமைப்பிற்கான நீரோட்டங்கள் தடைப்பட்டுள்ளனவா, மக்களுக்கு அபாயத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் காற்றாலை கோபுரங்கள் அமைக்கப்பட்டு உள்ளனவா? என்பதையும் பார்ப்போம்.

மேலும் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுகின்ற போது மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் இந்தக் காற்றாலைகள் அமைக்கப்பட்டுள்ள–னவா?, அதற்கான எல்லைகளையும் நாங்கள் பரிசோதிப்போம். இவ்வாறான பிரச்சினைகள் காணப்பட்டால் அந்தக் காற்றாலை கோபுரங்கள் மன்னார் நகர சபை சட்டத்தின் ஊடாக அகற்றப்படும்.

மன்னார் நகர சபையின் 'குடிபுகு சான்றிதழ்' பெற்றுக்கொள்ளாமல் மன்னாரில் காற்றாலைத் திட்டத்தை அவர்கள் முன்னெடுக்க முடியாது. மன்னார் நகர எல்லைக்குள் அவர்கள் எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியாது என்பதை அவர்களுக்கு தெரிவித்துள்ளேன்.

எனவே மன்னார் நகர சபை பிரிவில் நகர திட்டமிடல் அதிகார சபை மற்றும் மன்னார் நகர சபையின் அனுமதி பெற்றுக் கொள்ளாது காற்றாலை மின் திட்டம் என்றால் என்ன, எத் திட்டமாக இருந்தாலும் அத்திட்டங்கள் அனைத்தையும் மன்னார் நகர சபை முற்றாக தடை செய்யும். – எனத் தெரிவித்தார்.

மேலும் மன்னார் நகர சபை பிரிவில் 108 அனுமதியற்ற கட்டடங்களு–க்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதற்கான அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளது. அதிகமான கட்டடங்கள் அனுமதி பெற்றுக் கொள்ளாமல் அமைக்கப்பட்டுள்ளன.

குறித்த கட்டடங்கள் அதாவது மதில், வீடு, கடைத்தொகுதி உள்ளடங்கலாக அனைத்தும் மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் கட்டடங்களாக கருதப்படும். திட்டமிடப்படாத கட்டடங்களால் வெள்ளப் பெருக்கு உள்ளிட்ட அர்த்தங்கள் ஏற்படுகிறது.

எனவே கட்டடம் கட்டிய பின்னர் எடுக்கின்ற அனுமதியையாவது எடுக்க வேண்டும். அல்லது நகர சபை கட்டளைச் சட்டத்தின் படி இடித்து அகற்றப்படும்.

நிறைய கட்டடங்களுக்கு 14 நாள்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. உரிய முறையில் செயல் படாது விட்டால் நகர சபை கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் மன்னார் நகர சபையின் கடந்த அமர்வின் போது தீர்மானம் ஒன்றை எடுத்துள்ளோம். மன்னார் நகர சபை பிரிவில் உள்ள உணவகங்கள் அனைத்திலும் எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் லஞ்சீற் பயன்படுத்துவது தடை செய்ய முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கு பதிலாக உக்கக் கூடிய, சூழலுக்கு தீங்கு ஏற்படுத்தாத உணவுத் தட்டுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதனைக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள முடியும். – என அவர் மேலும் தெரிவித்தார்.

# உள்ளூராட்சி சபைகள் மூலம் கிடைக்கும் வற் வரியை அந்தந்த உள்ளூராட்சி சபைகளிடமே விட்டு விடுங்கள்

## மத்திய அரசிடம் யாழ் மாநகர முதல்வர் மதிவதனி கோரிக்கை

(ந.லோகதயாளன்)

மத்திய அரசு தனது நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்காக, உள்ளூராட்சி சபைகள் தமது வருமானத்தில் இருந்து தமது ஊழியர்களின் வேதனத்தைச் செலுத்த வேண்டும் நிர்ப்பந்திப்பதனால் உள்ளூராட்சி சபைகள் மூலம் கிடைக்கும் வற் வரியை அந்தந்த சபைகளிற்கே மத்திய அரசு விடுவிக்க வேண்டும் என யாழ்ப்பாணம் மாநகர சபை

முதல்வர் வி.மதிவதனி கோரிக்கை விடுத்துள்ளார்.



இலங்கை அரசு நிதி நெருக்கடியை எதிர்கொள்வதாக சுட்டிக் காட்டப்பட்ட போது சர்வதேச நாணய நிதியத்தின் சிபார்சு உள்ளூராட்சி சபைகள் மீது திணிக்கப்பட்டது. சிறிய சபைகள் மட்டுமல்ல, மாநகர சபைகள் பெரிய சபை, அதிக வருமானம் பெறுகின்றன எனக் காரணம் கூறப்படுகின்றது. பெரிய சபை, கூடிய வருமானம் என்றால் அதே போன்று அதிக உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் கொண்ட சபைகளாகவே மாநகர சபைகள் காணப்படும்.

இந்த வகையில் யாழ்ப்பாணம் மாநகர சபையில் தற்போது 816 பேர் பணியாற்றுவதனால் அவர்களின் சம்பளத்தின் 60 வீதம் 660 மில்லியன் ரூபா வரை செல்வதோடு மேலதிக நேரக் கொடுப்பனவு, விடுமுறைநாள் கொடுப்பனவு, உத்தியோகத்தர்களின் வாகனக் கொடுப்பனவு என்பவற்றிற்கு 300 மில்லியன் ரூபா செலவு ஏற்படுகின்றது.

இவ்வாறான சூழலில் யாழ்ப்பாணம் மாநகர சபையின் மொத்த வருமானம் 2026ஆம் ஆண்டு 1,500 மில்லியனைக்கூட எட்ட முடியாத காரணத்தால் இக்கோரிக்கையை முன் வைக்கிறோம். இவ் விடயத்தை மாநகர சபையில் தீர்மானமாக நிறைவேற்றவும் எண்ணுவதோடு ஏனைய சபைகளும் இதனை தீர்மானமாக கொண்டு வந்து ஒத்துழைக்க வேண்டும் என்ற கோரிக்கையும் முன் வைக்கின்றேன்.– என்றார்.

# வவுனியா பொருளாதார மத்திய நிலையத்திற்கு குளிரூட்டப்பட்ட அறைகளை அமைத்துத் தருக!

## சத்தியலிங்கம் எம்.பி. கோரிக்கை





வவுனியா பொருளாதார மத்திய நிலையத்திற்கு மேலதிக மரக்கறிகளை சேமித்து வைக்கக்கூடிய வகையில் குளிரூட்டப்பட்ட அறைகளை அமைத்துத்தருமாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார். நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற விவசாயம், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் அமைச்சுசார் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டபோதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்திருந்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

வவுனியா பொருளாதார மத்திய நிலையத்திற்கு பல்வேறு பகுதிகளிலிருந்தும் தினமும் தமது மரக்கறி உற்பத்தி பொருள்களை விவசாயிகள் விற்பனைக்காக கொண்டு வருகின்றனர். பொருளாதார மத்திய நிலையத்தில் மரக்கறிகளை வாங்கும் மொத்த வியாபாரிகள் அவற்றை பல இடங்களில் இருந்தும் கொள்வனவு செய்ய வரும், குறிப்பாக தம்புள்ளையை சேர்ந்த வியாபாரிகளுக்கு விற்பனை செய்கின்றனர். எவ்வாறிருப்பினும் தினமும் 4,000 தொடக்கம் 5,000 கிலோ வரையிலான மரக்கறிகள் அன்றைய தினம் விற்பனை செய்யப்பட முடியாத நிலையில் அதனை பாதுகாப்பாக சேமித்து வைக்கக்கூடிய வசதியின்மையால் பழுதடைகின்றன. இதனால் பொருளாதார மத்திய நிலைய மொத்த வியாபாரிகள் அதிக நட்டத்தையும், பிரச்சினைகளையும் எதிர்கொள்கின்றனர்.

ஆகையினால், வவுனியா பொருளாதார மத்திய நிலையத்தில் தினமும் எஞ்சுகின்ற மேலதிக மரக்கறிகளை பாதுகாப்பாக சேமித்து வைக்கக்கூடிய நவீன வசதிகளுடன் கூடிய குளிரூட்டப்பட்ட அறைகளை அமைக்கும் செயற்பாட்டை விவசாய அமைச்சின் 2026 ஆம் ஆண்டுக்கான திட்டத்தில் உள்வாங்கி அவற்றை அமைத்துத்தர வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார்.

இதற்கு பதிலளித்த விவசாயம், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டீ.லால்காந்த, இந்த பொருளாதார மத்திய நிலையம் தனது அமைச்சிற்கு உட்பட்டது அல்ல. எனினும், நீங்கள் குறிப்பிட்ட பிரச்சினை விவசாயிகளுடன் தொடர்புபட்ட முக்கிய பிரச்சினை என்பதால் பொருளாதார மத்திய நிலையத்திற்கு பொறுப்பான அமைச்சுடனும் பேசி எனது அமைச்சினூடாக 2026 ஆம் ஆண்டு மரக்கறிகளை சேமித்து வைக்கக்கூடிய நவீன வசதிகளுடன் கூடிய குளிரூட்டப்பட்ட அறைகளை அமைத்துத்தர நிதி ஒதுக்கீடு செய்வேன் என உறுதியளித்தார்.

இதனையடுத்து வவுனியா மாவட்ட விவசாயிகள், மக்கள் சார்பாக இந்த செயற்பாட்டிற்காக அமைச்சருக்கும், அரசாங்கத்திற்கும் நன்றி தெரிவிப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.



# ரூ. 18 கோடி பெறுமதிக்கு சொத்துக்கள் ஆஸி முதலீட்டாளர் ஒருவரிடம் மோசடி!

## நானாட்டான் பகுதியைச் சேர்ந்த இருவர் கைது

(மன்னார் நிருபர்)

மன்னாரில், மோசடி, சொத்துக்களை குற்றவியல் ரீதியாக கையகப்படுத்துதல் மற்றும் ஆஸ்திரேலிய முதலீட்டாளர் ஒருவரை மோசடி செய்தமை ஆகியவற்றுக்காக மன்னார் நானாட்டான் பகுதியை சேர்ந்த இரண்டு முக்கிய சந்தேக நபர்கள் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை காலை கைது செய்யப்பட்டனர்.


இரு சந்தேக நபர்களும் முருங்கன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். நேற்று வெள்ளிக்கிழமை மாலை முருங்கன் பொலிஸார் மன்னார் நீதிமன்றத்தில் அவர்களை ஆஜர் படுத்தினர். இரு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதுவான் உத்தரவிட்டார்.

மன்னார், நானாட்டான், புதுக்குடியிருப்பு, ஓமந்தை மற்றும் அலம்பில் பகுதிகளில் பல வணிகங்களை தொடங்க ஆஸ்திரேலிய முதலீட்டாளர் நிதி வழங்கியிருந்தார்.

இந்த முயற்சிகளில் நான்கு வன்பொருள் கடைகள், இரண்டு பெரிய தொன்னந்தோட்டம், ஒரு பால் பண்ணை, ஒரு நெல் வயல் மற்றும் பத்துக்கும் மேற்பட்ட வாகனங்கள் அடங்கும். சுமார். 180 மில்லியன் ரூபா பெறுமதியான மோசடிகள் இடம்பெற்றுள்ளன எனர் தெரியவருகிறது. சி.ஐ.டி யினர் நேற்றய் வெள்ளிக்கிழமை காலை இரு சந்தேக நபர்களையும் கைது செய்தனர்.

எனினும் முக்கிய சந்தேக நபரும் அவரது மனைவியும் தற்போது தலைமறைவாக உள்ளனர்.






# ஐக்கிய நாடுகள் சபையும் அதன் அவசியமும்

**‘உலக ஐக்கிய நாடுகள் நாள்’ நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. அதையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, உலக அமைதியையும் நல்லிணக்கத்தையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்காக 1945 ஆம் ஆண்டு அக்டோபர் 24 அன்று ஐக்கிய நாடுகள் சாசனம் நடைமுறைக்கு வந்ததன் ஆண்டு நிறைவை ‘உலக ஐக்கிய நாடுகள் நாள்’ குறிக்கிறது.

ஐக்கிய நாடுகளின் நோக்கங்கள் மற்றும் சாதனைகள் குறித்து உலக மக்கள் அனைவரும் அறிந்து கொள்ளவும், அதன் பணிகளுக்கு ஆதரவளிக்கவும் வேண்டும் என்ற நோக்கத்தில் 1948 ஆம் ஆண்டு முதல் இந்த நாளை ஐக்கிய நாடுகள் பொதுச் சபை கொண்டாடி வருகிறது.

ஐக்கிய நாடுகள் நாளின் முக்கிய எதிர்பார்ப்பு என்ன என்று பார்த்தால், அதன் அடிப்படை நோக்கங்களை மீண்டும் உறுதிப்படுத்துவதும், அவற்றை அடைவதற்கான உறுதியான முயற்சிகளை ஊக்குவிப்பதும் ஆகும். அமைதி மற்றும் பாதுகாப்பு, மனித உரிமைகள் மற்றும் நிலையான வளர்ச்சி ஆகிய மூன்று முக்கிய தூண்களை அடிப்படையாகக் கொண்டது ஐ.நா. இந்த நாளில், நாடுகளுக்கிடையே உள்ள வேறுபாடுகளைக் களைந்து, மோதல்களைத் தவிர்த்து, உலக அமைதியை நிலைநாட்டுவதன் அவசியத்தை வலியுறுத்துவது முதன்மையான எதிர்பார்ப்பாகும்.

அத்துடன், அடிப்படை மனித உரிமைகளை மதித்து, அனைவருக்கும் சமத்துவத்தையும் நீதியையும் உறுதி செய்வதற்கு உறுப்பு நாடுகள் எடுக்கும் நடவடிக்கைகளை மதிப்பாய்வு செய்வதும், பசி, வறுமை, காலநிலை மாற்றம் போன்ற உலகளாவிய சவால்களை எதிர்கொள்வதற்கான கூட்டு முயற்சிகளைத் தீவிரப்படுத்துவதும் இந்த நாளின் முக்கிய எதிர்பார்ப்புகளாகும். ஐ.நா.வின் மூலம் உலக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, அதன் இலக்குகளை அடைவதற்கு சர்வதேச அளவில் ஒத்துழைப்பை அதிகரிப்பதே இந்த நாளின் உண்மையான இலக்காகும்.

இவ்வாறான எதிர்பார்ப்புகளை கொண்ட ஐக்கிய நாடுகள் சபையானது ஒரு சர்வதேச அமைப்பாகும். இது இரண்டாம் உலகப் போரின் முடிவில் (1945) எதிர்கால உலகப் போர்களைத் தடுக்கும் நோக்கத்துடனும், உலகளாவிய ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காகவும் உருவாக்கப்பட்டது. அதன் தலைமையகம் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் அமைந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொருள் மற்றும் நோக்கம் என்பவற்றை ஆராய்ந்தால் ஐக்கிய நாடுகள் சபையின் சுருக்கமான அர்த்தம் உலக நாடுகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயல்படும் ஒரு பொதுவான தளமாகும். அதன் அடிப்படைச் சாசனத்தில் பொறிக்கப்பட்ட முக்கிய நோக்கங்களாக –

* உலக அமைதி மற்றும் பாதுகாப்பைப் பேணுதல். நாடுகளுக்கிடையே மோதல்கள் ஏற்படுவதைத் தடுத்து, அமைதியான முறையில் பேச்சுவார்த்தை மூலம் தகராறுகளைத் தீர்க்க உதவுதல்.
* நாடுகளுக்கிடையே நட்புறவை வளர்த்தல், சம உரிமை மற்றும் சுயநிர்ணயக் கோட்பாட்டின் அடிப்படையில் அனைத்து உறுப்பு நாடுகளுக்கிடையில் இணக்கமான உறவுகளை மேம்படுத்துதல்.
* சர்வதேச ஒத்துழைப்பை ஊக்குவித்தல். பொருளாதாரம், சமூகம், கலாச்சாரம் மற்றும் மனிதாபிமானப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலும், மனித உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரங்களையும் மேம்படுத்துவதிலும் உலகளாவிய ஒத்துழைப்பைப் பெறுதல்.
* நாடுகளின் நடவடிக்கைகளை ஒத்திசைப்பதற்கான மையம். இந்த நோக்கங்களை அடைவதற்காக அனைத்து நாடுகளின் முயற்சிகளையும் ஒருங்கிணைக்கும் ஒரு மையமாகச் செயல்படுதல். போன்றவற்றை கூறலாம்.

ஐக்கிய நாடுகள் சபையானது அனைத்து நாடுகளும் ஒரு கூரையின் கீழ் வந்து, சமாதானத்தைப் பேணுதல், மனித உரிமைகளைப் பாதுகாத்தல், வறுமையைக் குறைத்தல் மற்றும் நிலையான வளர்ச்சியை அடைதல் ஆகிய

தொடர்ச்சி ▼

# ஐக்கிய நாடுகள் சபையும் அதன் அவசியமும்

தொடர்ச்சி ▲

பொதுவான இலக்குகளுக்காக இணைந்து செயல்படுவதற்கான உலகளாவிய தளமாகும். ஆரம்பத்தில் 51 உறுப்பு நாடுகளுடன் தொடங்கிய இந்த அமைப்பு, இன்று உலகின் அநேகமாக அனைத்து இறையாண்மை நாடுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 193 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது.

இலங்கை, அப்போதைய சிலோன் (Ceylon) என்ற பெயரில், 1955ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்புரிமையைப் பெற்றுக் கொண்டது. இலங்கை விடுதலை அடைந்து ஏழு ஆண்டுகளுக்குப் பின்னரே இந்த அங்கத்துவம் கிடைத்ததும் குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய நாடுகள் சபையின் அவசியம் உலகளாவிய ரீதியில் அமைதி, பாதுகாப்பு, மற்றும் மனித மேம்பாட்டை உறுதி செய்வதில் அதன் தனித்துவமான பங்கை எடுத்துக்காட்டுகிறது. இரண்டு உலகப் போர்களின் பேரழிவுகளுக்குப் பிறகு நிறுவப்பட்ட இச்சபை, நாடுகளுக்கிடையே சமாதான முறையில் பிணக்குகளைத் தீர்ப்பதற்கான ஒரு மைய அரங்கமாகத் திகழ்கிறது.

மேலும், ஐ.நா. அதன் துணை நிறுவனங்கள் மூலம் உலகளாவிய பிரச்சினைகளுக்குப் பல்துறைசார் தீர்வுகளை வழங்குகிறது. உதாரணமாக, உலக சுகாதார நிறுவனம் (WHO) போலியோவை ஒழிப்பதிலும், கோவிட்-19 போன்ற தொற்றுநோய்களை எதிர்த்துப் போராடுவதிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது.

அதேபோல, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (UNDP) நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கு உதவுகிறது. இவை தவிர, பாரிஸ் காலநிலை ஒப்பந்தம் (Paris Agreement) போன்ற சர்வதேச சட்டங்களை உருவாக்கி, மனித உரிமைகளுக்கான உலகப் பிரகடனத்தை நிலைநாட்டுவதன் மூலம், ஐ.நா. சபை அனைத்து நாடுகளும் சமமானவை என்ற கொள்கையின் அடிப்படையில் சர்வதேச ஒத்துழைப்புக்கும் நீதிக்கும் அடித்தளமிடுகிறது.

எனவே, விமர்சனங்கள் இருப்பினும், ஐக்கிய நாடுகள் சபையின் தேவை இன்று எந்தவொரு மாற்று நிறுவனத்தையும் விட அதிகமாகவே உள்ளது, ஏனெனில் இதுவே உலகின் சிக்கலான சவால்களை எதிர்கொள்வதற்கும், நிரந்தரமானதும் நீடித்ததுமான உலகளாவிய நலனை மேம்படுத்துவதற்கும் உள்ள ஒரே பரந்துபட்ட தளமாகும்.

**-கோபாலகிருஷ்ணன் யாழினிப்ரியா-**
**(ஊடகக்கற்கைகள் துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)**

# அநுராதபுரம் - பாதெனிய வீதியில் மழையால் அடுத்தடுத்து விபத்துகள்



**(உடப்பு க.மகாதேவன்)**

அதிக மழையுடன் தொடரும் மோசமான வானிலை காரணமாக, அநுராதபுரம் – பாதெனிய வீதியில், தலாவை ஏரியாகம பகுதியில் நேற்றுக் காலை முதலில் Mitsubishi Montero வகை வாகனமும், அதன் பின்னர் ஒரு லொறியும் வழுக்கி, சாலையை விட்டு விலகி விபத்துக்குள்ளாகின.

அதே இடத்துக்கு அருகில், நேற்று மதியம் சுமார் 12.00 மணியளவில், இலங்கை போக்கு வரத்துக்குச் சொந்தமான பஸ்ஸும், ஓட்டோவும் மோதியமையால் மூன்றாவது விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் ஓட்டோ சேதமடைந்ததுடன், சாரதி படுகாயமேற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ் திரைப்படக் கழகத்தின் மாதாந்தப் படக்காட்சி நாளை




எதிர்வரும் 26.10.2025 அன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணியளவில் மேற்படி கழகத்தின் 17 ஆவது திரையிடல் நிகழ்வு கந்தர் மடத்தில் உள்ள அம்மன் வீதி, எங்கட புத்தகங்கள் இல்லத்தில் நடைபெறும். மார்ட்டின் விக்கிரமசிங்க எழுதிய நாவலை அடிப்படையாகக் கொண்டு 'விராகய' என்ற பெயரில் எடுக்கப்பட்ட இச் சிங்களத் திரைப் படத்தை திஸ்ஸ அபயசேகர நெறிப்படுத்தி இருக்கிறார். ஆங்கிலத் துணைத் தலைப்புடன் காண்பிக்கவிருக்கும் இத்திரைப்படம் 1987 இல் வெளிவந்தது என்பது குறிப்பிடத்தக்கது.




# கலைஞனையும் கலையையும் போற்றுவோம்...!

**இன்று சர்வதேச கலைஞர்கள் தினம். அதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

பெரிய கலைஞர்கள் பிறக்கவில்லை - அவர்கள் படித்தவர்கள். திறமை என்பது ஒரு உள்ளார்ந்த அல்லது பரம்பரை பரிசு என்ற கருத்து பெரும்பாலும் ஒரு கட்டுக்கதை. மாறாக, அது கவனம் செலுத்தப்பட்ட கடின உழைப்பு, சரிபார்க்கப்பட்ட கல்வி வளங்கள் மற்றும் நன்கு வடிவமைக்கப்பட்ட, வளர்க்கும் ஒரு திறனாகப் பார்க்க கலைஞர்களை ஊக்குவிக்கிறது.

சர்வதேசத்தை எட்டும் இத்தகைய கலைஞர்களின் படைப்பாற்றலைத் திறம்பட மேம்படுத்த நாம் கைகொடுப்பது என்பது எதிர்கால உலகின் செழுமைக்கான முதலீடாகும்.

படைப்பாற்றலும் சமூக மாற்றமும்தான் கலைத்துவம்.

கலைஞர்கள், ஓவியம், சிற்பம், இசை, நாடகம், இலக்கியம் மற்றும் நவீன த்தில் உள்ள கலைகள் எனப் பல்வேறு வடிவங்களில் மனித அனுபவத்தின் சாரத்தை - மகிழ்ச்சி, துயரம், போராட்டம், நம்பிக்கை என பல வடிவில் பதிவு செய்பவர்கள்.

கனடிய கலைஞரான கிறிஸ் மக்ளுர் (Chris MacClure) என்பவரால் 2004 ஆம் ஆண்டு அக்டோபர் 25 அன்று நிறுவப்பட்ட இந்தத் தினத்தின் நோக்கம், கலைஞர்களின் உழைப்பையும் தியாகத்தையும் உலகளாவிய ரீதியில் வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதாகும்.

சமூக உரையாடலுக்கான ஊடகமாக கலைஞர்களின் கலைப்படைப்புகள் காணப்படுகின்றன. சமூகத்தில் நிலவும் சமத்துவமின்மை, அரசியல் வன்முறைகள் அல்லது சுற்றுச்சூழல் நெருக்கடிகள் போன்ற கடினமான தலைப்புகளைத் தயக்கமின்றி விவாதிக்க உதவுகின்றன. எடுத்துக்காட்டாக, இலங்கையில் 1990களில் நடந்த வன்முறைகளின் நினைவுப்பெட்டகமாக (Memory Repository) அக்காலத்து கட்புல கலைகள் அமைந்திருப்பதைச் சமூகவியல் ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. இதன் மூலம், கலை வரலாற்றையும், அரசியலையும் உள்வாங்கி, சமூகத்தைப் பாதிக்கும் சம்பவங்களை ஆவணப்படுத்துகிறது.

அறிவுத்திறன் மற்றும் மனநல மேம்பாடு கொண்டனவாக அமைகின்றன:- குழந்தைகளுக்கான கல்வியில் கலையை ஒரு கருவியாகப் பயன்படுத்துவதன் மூலம், அவர்களின் படைப்பாற்றல் சிந்தனைத் திறன்கள் மேம்படுவதுடன், சிக்கலைத் தீர்க்கும் திறனும் அதிகரிக்கிறது என கல்விசார் ஆய்வுகள் நிரூபிக்கின்றன. மேலும், இசை போன்ற கலை வடிவங்கள் மன அழுத்தத்தைக் குறைக்கவும், மகிழ்ச்சிக்கு அவசியமான 'டோப்பமைன்' (Dopamine) என்னும் மூளை இரசாயனத்தைச் சுரக்கச் செய்யவும் உதவுகிறது என மருத்துவ ஆராய்ச்சிகள் உறுதிப்படுத்துகின்றன.

பொருளாதார வளர்ச்சிக்கு வலுவூட்டும் வகையில் அமைகின்றன:-

படைப்பாற்றல் மற்றும் கலாசாரத் தொழில்கள் நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கக்கூடிய ஆற்றல் கொண்டவையாகக் காணப்படுகின்றன. உதாரணமாக, தென் கொரியா போன்ற நாடுகள் தங்கள் கலை மற்றும் கலாசாரத் தயாரிப்புகளை உலகிற்கு அறிமுகப்படுத்தி, வலுவான பொருளாதாரத்தை அடைந்திருப்பது இதற்குச் சிறந்த சான்றாகும். கலைஞர்களை ஆதரிப்பது, உள்ளூர் சுற்றுலா மற்றும் கைவினைப் பொருள்கள் மூலம் புதிய வேலைவாய்ப்புகளையும் அந்நியச் செலாவணியையும் ஈட்டி, நாட்டின் பொருளாதார சவால்களுக்குத் தீர்வாக அமைகிறது.

கலைஞர்களின் படைப்பாற்றலைத் திறம்பட வளர்க்கும் வழிகள்:-

சர்வதேச கலைஞர்கள் தினத்தைக் கொண்டாடுவதை விட, அவர்களின் படைப்பாற்றல் திறனை நடைமுறையில் ஆதரிப்பதே மிக முக்கியமாகும். படைப்பாற்றல் பொருள் மாதிரிகள் மற்றும் நியாயமான ஊதியக் கட்டமைப்புகள் மூலமாகவே இதனைச் சாத்தியப்படுத்த முடியும்.

புதிய தொழில்நுட்பப் பயன்பாட்டையும் கூட்டுழைப்பையும் உள்வாங்கி உள்ளன:-

நவீன உலகில், படைப்பாற்றல் பொருள் மாதிரிகள் போன்ற யுஐ-ஆல் இயக்கப்படும் கருவிகள் கலைஞர்களின் திறன்களைப் பெருக்கி, அவர்களது தனிப்பட்ட பாணியைப் பாதுகாக்க உதவுகின்றன. ஒரு கலைஞர் தனது தனித்துவமான கைரேகையைப் பாதுகாக்கும் அதே வேளையில், மற்ற

தொடர்ச்சி ▼




# கலைஞனையும் கலையையும் போற்றுவோம்...!

தொடர்ச்சி ▲

கலைஞர்கள் அவரது படைப்பிலிருந்து கற்றுக் கொள்ளவும், புதிய படைப்புகளை உருவாக்கவும் இந்தத் தொழில்நுட்பக் கூட்டுழைப்பு வழி வகுக்கிறது.

சமூகப் பாதுகாப்பு மற்றும் ஊதிய உத்தரவா–தமாக உள்ளது:–

பல்வேறு நாடுகளில் கலைஞர்கள் நிலையான வருமானம், சமூகப் பாதுகாப்பு மற்றும் உரிமம் சார்ந்த சவால்களை எதிர்கொள்கின்றனர். கலைஞர்களின் நீண்டகால நலனை உறுதிப்படுத்தவும், அவர்களின் உழைப்புக்குச் சரியான நியாயமான ஊதியத்தையும், அங்கீகாரத்தையும் வழங்கவும் உலகளாவிய கொள்கை மாற்றங்கள் தேவைப்படுகின்றன.

கல்வி மற்றும் கலாசாரப் பாதுகாப்புக்கான முதலீடாகும்:–

கலை மற்றும் கலாசாரக் கல்வியை ஊக்குவிப்பதன் மூலம், அடுத்த தலைமுறை இளம் கலைஞர்கள் அடையாளம் காணப்படுவார்கள். கலைஞர்களின் படைப்புகளை முறையாக ஆவணப்படுத்துதல் மற்றும் காட்சிப்படுத்துதல் ஆகியவை, கலாசார மரபுகளைப் பேணிக் காப்பதற்கும், கலைக்கான மதிப்பைச் சமூகத்தில் நிலைநிறுத்துவதற்கும் இன்றியமையாததாகும்.

ஆகவே, நாம் ஒவ்வொருவரும் ஒரு கலைஞரின் படைப்பை பார்ப்பதன் மூலமாகவோ, ஒரு கலை நிகழ்ச்சியில் கலந்து கொள்வதன் மூலமாகவோ, அல்லது ஒரு கலைப் படைப்பைப் பற்றிப் பேசுவதன் மூலமாகவோ, கலைஞர்களின் இந்த உலகளாவிய இயக்கத்தில் பங்கேற்கலாம். கலைஞர்களின் படைப்பாற்றலைத் திறம்பட ஆதரிப்பதன் மூலமே, நாம் ஒரு செழுமையான, சிந்தனை மிக்க, மற்றும் கலாச்சார ரீதியாக ஒன்றிணைந்த சர்வதேசச் சமூகத்தை உருவாக்க முடியும்.

மனித நாகரீகத்தின் கண்ணாடியாகவும், காலத்தின் சாட்சியாகவும், சமுதாய மாற்றத்திற்கான ஊக்கியாகவும் கலை திகழ்கிறது. ஒரு கலைஞன், தான் வாழும் சமூகத்தின் இன்ப துன்பங்களையும், தனது அகத்தின் தரிசனங்களையும், உலகிற்குக் காணொளியாக்கும் உன்னதப் பணியைச் செய்கிறான். இத்தகைய கலைஞர்கள், சமுதாயத்தின் உணர்ச்சித் துடிப்பை எழுப்பும் உயிர்ப்பு சக்திகள் ஆவர். ஆனால், நாம் ஒரு கலைஞரைப் பாராட்ட முற்படுகையில், அறியாமலேயே, அவரது கலைப் படைப்பினை விடவும், அவரது சொந்த வாழ்க்கையின் போராட்டங்கள், வறுமை, தனிப்பட்ட துயரங்கள் அல்லது சமூக அந்தஸ்து ஆகியவற்றின் அடிப்படையில் எடைபோடும் ஒரு போக்கிற்கு ஆள்படுகிறோம். இந்தச் சலனம், கலையின் உண்மையான மதிப்பீட்டைச் சிதைத்துவிடுகிறது.

ஒரு கலைஞரைப் பாராட்டுவது எமது கடமை என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. ஆனால், அது எத்தகைய பாராட்டு? அது ஒரு கலைஞனின் கஷ்டமான வாழ்க்கை நிலைக்கு நாம் காட்டும் ‘பச்சாதாபத்தின்’ வெளிப்பாடா? அல்லது, அவர் தனது கலைப்படைப்பில் வெளிப்படுத்தும் ‘நுண்ணியலின்’ தரம், ‘நுட்பத்தின்’ வீரியம், ‘உணர்ச்சியின்’ ஆழம் ஆகியவற்றுக்கு நாம் அளிக்கும் ‘உண்மையான கௌரவமா’?

ஒரு படைப்பின் காலத்தால் அழியாத தன்மை என்பது, கலைஞனின் வாழ்நிலை கடந்து, கலையின் தரத்தைப் பொறுத்தே அமைகிறது. கலையின் உண்மையான தரத்தைக் கண்டறிந்து, அதைப் போற்றுவதே எமது தலையாய கடமையாகும். ஒரு கலைஞனின் தனிப்பட்ட வாழ்நிலை (சமூக, பொருளாதார, தனிப்பட்ட துன்பங்கள் அல்லது இன்பங்கள்) அவரது கலையின் தரத்தை மதிப்பிடுவதற்கான அளவுகோல் அல்ல் கலையின் உள்ளார்ந்த நுட்பம், படைப்பின் ஆழம், அது சமூகத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே ஒரு கலைஞரைப் பாராட்டுவதுதான் கலைக்கும் கலைஞருக்கும் நாம் செய்யும் நீதியான மரியாதையாகும்.

கலை மற்றும் கலைஞரின் வாழ்நிலை பற்றிய தவறான மதிப்பீடுகள்.

கலை உலகில் ஒரு நீண்டகாலமாகக் காணப்படும் தவறான பிம்பம், ‘துன்பம் தரும் கலை’ என்பதாகும். ஒரு கலைஞன் வறுமையில் வாடினால்தான், புறக்கணிக்கப்பட்டால்தான் அவனது படைப்பு ஆழம் பெறும், நேர்மை பெறும் என்று நம்பப்படுகிறது. வின்சென்ட் வான்கோ அல்லது சில்வியா பிளாத் போன்றவர்களின் கலை மேதைமை போற்றப்படுவதற்கு, அவர்களது தனிப்பட்ட துன்ப வாழ்க்கை ஒரு காரணமாக முன்னிறுத்தப்படுவதுண்டு. இது, துன்பம் மட்டுமே கலையின் மூல ஊற்று என்று

தொடர்ச்சி ▼

# கலைஞனையும் கலையையும் போற்றுவோம்...!

தொடர்ச்சி ▲

நம்பும்படி சமுதாயத்தை வற்புறுத்துகிறது.

இதன் மறுபக்கத்தில், ஒரு கலைஞன் தனது துறையில் மகத்தான வணிக வெற்றியைப் பெறும் போது, அவரை 'கலையை விற்றுவிட்டவர்' அல்லது அவரது கலைத் தரம் குறைந்துவிட்டது என்று விமர்சனம் செய்வதும் தவறான மதிப்பீட்டின் வெளிப்பாடே ஆகும். உதாரணமாக, நவீனத் திரைப்பட இயக்குநர்கள் அல்லது வெற்றிகரமான இசைக் கலைஞர்கள் பணக்காரர்களாக இருக்கும்போது, அவர்களின் கலைத் திறனை விட அவர்களின் நிதிநிலையைப் பேசும் போக்கு காணப்படுகிறது. ஒரு கலைஞனின் பொருளாதார நிலைக்கும், அவரது படைப்பின் தரத்திற்கும் எவ்வித நேரடித் தொடர்பும் இல்லை என்பதை ஆய்வுகள் நிரூபிக்கின்றன.

உண்மையில், கலைஞனின் வாழ்க்கைக் குறிப்பு அவரது படைப்பைக் கிரகிக்கத் துணைபுரியலாமே




தவிர, அதன் உள்ளார்ந்த தரத்தைத் தீர்மானிக்காது. ஓர் ஓவியர் தனது தனிப்பட்ட சோகத்தை ஓர் ஓவியத்தில் வெளிப்படுத்தியிருக்கலாம், ஆனால் அந்த ஓவியத்தின் தரமானது, அவர் பயன்படுத்திய வண்ணத்தின் வீரியம், தூரிகையின் நுட்பம், வெளிப்பாட்டின் தீவிரம் ஆகியவற்றைப் பொறுத்தே அமையும்.

எனவே, படைப்பாளியின் வரலாற்றை அளவுக்கு மீறி மையப்படுத்துவது, கலையின் முக்கிய அம்சமான அதன் நுட்பம், கட்டமைப்பு, அதன் தனிப்பட்ட அழகு ஆகிய அம்சங்களிலிருந்து நம் கவனத்தைத் திசைதிருப்பி விடுகிறது. இந்தத் தவறான அணுகுமுறை, பார்வையாளர்கள் அல்லது விமர்சகர்கள் கலைஞன் மீதுள்ள பச்சாதாப உணர்வை, கலையின் தரம் மீதான உண்மையான மதிப்பீடாக மாற்றிக்கொள்ளும் சலனத்திற்கு வழிவகுக்கிறது. கலையின் உயிர்நாடியைப் புறக்கணித்து, கலைஞனின் சரீர வாழ்க்கையைப் போற்றுவது, கலையின் மீதான மரியாதைக்கு முரணானது.

ஒரு படைப்பு சமுதாயத்தில் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்த வேண்டுமானால், அதன் தரம் உயர்வாக இருக்க வேண்டும். தரமான கலை, அதன் நோக்கம் மனித மனதை மேம்படுத்துதலை அடைய உதவுகிறது. தரமற்ற படைப்பு, வாழ்நிலையால் புகழப்பட்டாலும், அது உடனடியாக சமூக ஊடகங்களின் கவனத்தை ஈர்க்கலாம், ஆனால் விரைவிலேயே காலாவதியாகி, கலை வரலாற்றில் இருந்து விலகிவிடும். உதாரணத்திற்கு, பாரதியாரின் கவிதைகள் போற்றப்படுவது, அவர் வறுமையில் வாடியவர் என்பதற்காக அல்ல் மாறாக, அவரது சொற்களின் வீரியம், தேசப்பற்றின் தீவிரம், யாப்பின் சிறப்பு, மற்றும் சமுதாயத்தின் மீது அவர் ஏற்படுத்திய நீடித்த சமூக மற்றும் அரசியல் தாக்கத்தின் காரணமாகும். தரமான கலை மட்டுமே, மனித மனதை மேம்படுத்துகிறது, விமர்சனச் சிந்தனையைத் தூண்டுகிறது, சமூக மாற்றத்தைத் தூண்டுகிறது.

கலையின் தரத்தை மட்டுமே மதிப்பிடுவது, கலைஞனுக்கு நாம் செய்யும் நீதியான மரியாதையாகும். ஒரு கலைஞனைப், பாவம் பார்த்தோ அல்லது பரிதாபப்பட்டோ போற்றுவது, அவரது திறமை மற்றும் உழைப்பைக் குறைத்து மதிப்பிடுவதற்குச் சமமாகும். அவர் தனது கலைக்காகச் செலவிட்ட காலம், அவர் கற்றுக்கொண்ட நுட்பங்கள், அவர் செய்த அர்ப்பணிப்பு, மேதைமை ஆகிய வற்றைப் பாராட்டுவதே உண்மையான கௌரவம். கலைஞனின் உணர்ச்சிப்பூர்வமான வாழ்வைத் தாண்டி, அவரது படைப்பின் கட்டமைப்பு, வடிவமைப்பு, நுட்பம் ஆகியவற்றைப் பாராட்டுவது, அந்தக் கலைஞனின் பணியை நாம் மதிக்கும் ஆழத்தை உணர்த்துகிறது. மேலும், தரத்தை மட்டும் மதிப்பிடுவது, கலைஞர்களுக்கு மேலும் உயரிய, கடினமான, சவாலான படைப்புகளை உருவாக்க உத்வேகம் அளிக்கும்.

கலையின் தரத்தை போற்றுதலே எமது நெறிமுறைக் கடமை

ஒரு கலைஞனின் வாழ்நிலை, அவரது கலையை உருவாக்குவதற்கான உந்துசக்தியாக இருந்திருக்கலாம். ஆனால், ஒரு படைப்பின் மதிப்பீடு என்பது, அது பார்வையாளர் அல்லது வாசகரின் மனதை எவ்வாறு பாதிக்கிறது, எந்த அளவிற்கு நீடித்து நிற்கிறது என்பதைப் பொறுத்தே அமைய வேண்டும். கலைஞனின் வாழ்க்கையல்ல, கலையின் தரமே முக்கியம் என்ற கோட்பாட்டை நாம் உறுதியாக நிலைநிறுத்த வேண்டும்.

எனவே ஒரு கலைஞனைப் பாராட்டும்போது, அவரது துயரங்களுக்கு அனுதாபம் காட்டுவதை விட, அவரது படைப்பின் வலிமைக்குக் கைதட்டுவது, கலைக்கான உண்மையான நீதியாகும். நாம் கலையின் தரத்தை மதிப்பிடுவதன் மூலம், வெறும் கலைஞரை மட்டுமல்ல, கலை வடிவத்தின் புனிதத்தையும், கலை மீதான எமது சமுதாயத்தின் பக்குவத்தையும் உயர்த்துகிறோம். இது ஒரு நெறிமுறைக் கடமை ஆகும். இந்தக் கடமையை நாம் நிறைவேற்றுவதன் மூலம், இனி வரும் தலைமுறையினர், கலை வரலாற்றை வெறும் கதைகளாக அல்லாமல், உன்னதமான படைப்புகளின் உறைவிடமாகப் பார்க்க வழிசெய்வோம். கலையின் தரம் மட்டுமே நிரந்தரமானது. அதைத் தேடி, போற்றி, மதிப்பளிப்பதே எமது சமுதாயத்தின் உயரிய பண்பாடாகும்.

-கோபாலகிருஷ்ணன் யாழினிப்ரியா-
(ஊடகக்கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

# இன்றைய ராசி பலன்கள் - 25.10.2025




இன்றைய நாளைக் கையாள்வது கடினமாக இருக்காது. வளர்ச்சி குறித்து சுதந்திரமாக முடிவெடுக்கும் உறுதியான மனநிலை காணப்படும். சிறிது முயன்றால் வெற்றி காணலாம்.

பணியிடத்தில் சிறந்த நிலையில் இருப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். உங்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.இதனால் இருவரிடையேயான புரிந்துணர்வு வலுப்படும்.

இன்று பண வரவு காணப்படும். அதிர்ஷ்டம் காணப்படும். இன்று பணத்தை சேமிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும் என்றாலும் உறுதி யுடனும் கவனமுடனும் செயல்பட்டு அதனை சமாளித்து வெற்றி காண்பீர்கள்.

வேலை தொடர்பான பயணம் காணப் படும். பயணம் கடினமாக இருக்கும் மற்றும் நீங்கள் சில அதிருப்தியான சூழ்நிலையை சந்திப்பீர்கள்.

உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள் வீர்கள். உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்வதன் மூலம் இருவரும் நல்லுறவை பராமரிக்கலாம்.

இன்று வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். இன்று செலவுகள் அதிகம் காணப்படுவதால் சேமிக்க இயலாது.

இன்று பதட்டம் காணப்படும். எனவே இன்று இதனை தவிர்த்தல் சிறந்தது.




இன்று உங்கள் செயல்களில் கவ–னமாக இருக்க வேண்டியது அவசியம். எதிர்மறை எண்ணங்களை வளர்த்துக் கொள்ளாதீர்கள். நம்பிக்கையுடனும் மகிழ்ச்சியுடனும் இருங்கள்.

பணியிடத்தில் அமைதியான சூழ் நிலை காணப்படாது. சக பணியாளர்கள் மற்றும் உங்கள் மேலதிகாரிகள் உங்களை புறக்கணிப்பது போலவும் தவிர்ப்பது போலவும் உணர்வீர்கள். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் துனையிடத்தில் பொறுமையின்மையும் கவனமற்ற வார்த்தைகளும் இருவருக்குமிடையே மகிழ்ச்சி யற்ற தன்மையை ஏற்படுத்தும். இத்தகைய நடத்தையை தவிர்ப்பதன் மூலம் மகிழ்ச்சியை அனுபவிக்கலாம்.

பணப்புழக்கம் குறைவாக இருக்கும். தேவையற்ற செலவகள் ஏற்படும்.




இன்றைய நாள் உங்களுடைய இலக்குகளை அடைய சரியான முயற்சி எடுக்க உகந்த நாள். உங்கள் செயல்களை எளிதாக செய்வீர்கள். உங்கள் உறுதி மற்றும் தைரியம் மூலம் வெற்றி பெறு வீர்கள்.

பணியிடத்தில் நன்மை கிடைக்கும். உங்கள் செயல் திறன் உங்களுக்கு மகிழ்ச்சியையும் திருப்தியையும் அளிக்கும்.

நீங்களும் உங்கள் துணையும் மகிழ்ச்சியான தருணங்களை அனுபவிப்பீர்கள். இதனால் மிகுந்த திருப்தி ஏற்படும்.

நிதிநிலைமை ஸ்திரமாக இருக்கும். நல்ல சேமிப்பு நிலையை பராமரிப்பீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




இன்று கடினமான சூழ்நிலைகளை கையாளும்போது கவனமாக இருக்க வேண்டிய நாள். இன்று கோபம் மற்றும் பதட்டத்திற்கு ஆளாவீர்கள். அமைதியும் நம்பிக்கையும் கொள்ள வேண்டும்.

பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடத்தில் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்காது.

உங்கள் கோபத்தை உங்கள் துணையிடம் வெளிப படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க நீங்கள் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

பணப்புழக்கம் குறைவாக இருக்கும். தேவையற்ற செலவுகள் கவலையை உண்டாகும்.

அசௌகரியம் காரணமாக ஆரோக்கியம் பாதிக் கப்படும். தோல் சம்பந்தமான பிரச்சினைகளும் தூக்க மின்மையும் காணப்படும்.




இன்று சில சௌகரியங்களை விட் டுக்கொடுக்க வேண்டியிருக்கும். மகிழ்ச்சியை தக்க வைக்க நீங்கள் சிறப்பாக செயல்பட வேண்டும்.

பணியின் போது தவறுகள் ஏற்ப வாய்ப்புள்ளது. திட்டமிட்டு பணி யாற்றுவது விளைவுகளை மேம்படுத்த உதவிகரமாக இருக்கும். சக பணியாளர்களுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும்.

நீங்கள் விஷயங்களை தீவிரமான போக்கில் எடுத்துக் கொள்வதனால் உங்கள் துணையுடனான உறவு பாதிக் கப்படும். இனிமையான வார்த்தைகளைப் பேசுவதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணபுழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.




இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். நீங்கள் வெற்றி பெறுவதற்கு நம்பிக்கையுடன் இவை களை சமாளிக்க வேண்டும்.முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

பனியின் போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது. திட்டமிட்டு அட்டவணையிட்டு பணி யாற்றுவது அவசியம்.

உங்கள் துணையுடன் வாக்குவாதம் செய்ய முற்பட லாம். அமைதியான போக்கை மேற்கொண்டு உறவில் நல்லிணக்கத்தை தக்க வையுங்கள்.

பயணத்தின் போது பண இழப்புகள் நேரலாம். பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. பதட்டம் காரணமாக தலைவலி ஏற்படலாம்.




இன்று வெற்றிகரமான நாளாக இருக்கும். இன்று உங்கள் இலக்கு களில் வெற்றி பெற அதிக முயற்சி எடுக்க வேண்டும். இன்று ஓய்வின்றி செயலாற்றுவீர்கள். செயல்களை எளி தாக கையாள்வீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

உங்கள் பணிகளை திறம்பட செய்து முடிப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் அமைதியாக நடந்து கொள்வீர் கள். நீங்கள் இருவரும் சேர்ந்து பொழுதுபோக்கு விஷ யங்களை கண்டு மகிழ்வீர்கள்.

இன்று பண வரவு காணப்படும். இன்று உங்கள் வங்கியிருப்பு உயர்வதைக் காண்பீர்கள். புதிய முத லீட்டிற்கான முடிவுகளை எடுக்கலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 25.10.2025




இன்று உங்கள் திட்டங்களில் பலன் கிடைக்கும் இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலனைத் தரும்.

பணியிடச் சூழல் சிறந்த முறையில் செயலாற்றும் வகையில் இருக்கும். உங்கள் பணியில் திருப்தி அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பையும் புரிந்துணர்வையும் பகிர்ந்து கொள்வீர்கள். உங்களின் இந்த சகஜமான போக்கு உங்கள் துணையை மகிழ்விக்கும்.

நிதிநிலைமை இன்று சாதகமாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும். அது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். அமைதியான குடும்பச் சூழல் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். சிறப்பாக திட்டமிடுதல் மற்றும் யுக்திகளை கையாள்வதன் மூலம் வெற்றி பெறலாம். அமைதியாக இருந்து பதட்டத்தை தவிர்ப்பதன் மூலம் நன்மை கிடைக்கும்.

பணிகளை முன்கூட்டியே திட்டமிடுவதன் மூலம் தவறுகள் நேராமல் தடுக்கலாம். இதனால் உங்கள் பனியின் தரம் உயரும்.

உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்வதன் மூலம் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்ளலாம். வேறு விதமாக செயல்பட்டால் குழப்பமும் பதட்டமும் ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. என்றாலும் பூர்வீகச் சொத்து மற்றும் எதிர்பாராத வகையில் பணம் கிடைக்கும்.




இன்று தேவையற்ற மனக் குழப்பங்கள் சுமையாக இருக்கும். நம்பிக்கையுடன் இருந்தால் நன்மை காணலாம்.

உங்கள் பணியில் தவறுகள் நேரும். கவனமாக பணியாற்றினால் சிறப்பாக செயலாற்றலாம்.

உங்கள் துணையிடம் குழப்பமான மன நிலையை வெளிப்படுத்துவீர்கள். மனதை அமைதியாக வைத்துக் கொண்டு உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை அனுபவியுங்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பண இழப்பின் காரணமாக ஏமாற்றம் நிறைந்து காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று நீங்கள் அதிகப் பணியில் மூழ்கி இருப்பீர்கள். புதிதாக ஒன்றை அடைவதில் உறுதியாக இருப்பீர்கள். கடினமாக உழைப்பதன் மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடச் சூழல் சிறந்த செயல்திறன் ஆற்ற சாதகமாக இருக்கும். உங்கள் வேலைத் தரம் உங்களின் திறமையை பறைசாற்றும். நீங்கள் பணி சம்பந்தாமான சந்திப்பில் கலந்து கொள்வீர்கள். உங்கள் கருத்துக்களை தெளிவாக கூறுவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். எதிர்கால முடிவுகளைப் பற்றி கலந்தாலோசித்து பரஸ்பரம் ஒரு முடிவுக்கு வருவீர்கள்.


உங்கள் கடின உழைப்பின் மூலம் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் வகையில் பண வரவு காணப்படும்.

# திருப்புகழ் பாடச் வைத்தவன் முருகன்!

## (4 ஆம் நாள்)



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,
மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.




திருப்புகழ் பாடச் வைத்தவன் முருகன்
திருந்திட அருணகிரியைச் செய்தவன் முருகன்
திருப்புகழ் பாடினால் திருந்திடும் நாக்கு
திருப்புகழ் பாடுவோம் சிறந்திடும் வாழ்வு

மாம்பழம் முருகனை மாற்றியே விட்டது
மாம்பழம் அவனே சுவையும் அவனே
கதையினைக் கேட்டுக் கலங்கிட வேண்டாம்
எல்லாம் இறையின் தத்துவம் ஆகும்

கணபதி கந்தனின் சோதரன் ஆவார்
கந்தனின் காதலில் கணபதி உதவினார்
கதையினைக் கதையாய் கேட்டிட வேண்டும்
விமர்சனம் செய்வது வீண்விளை வாகும் !